911

உ

சிவமயம்.

தோத்திரப்பாமாலை.

ஸ்ரீ சாக்ஷிநாதசுவாமிகள்

மாணுக்கராகிய

செங்கமலசுவாமிகள்

அருளிச்செய்தது.

KOVILOOR ANDAVAR
A. No. 45544
LIBRARY, KOVILOOR

இஃது

சென்னபட்டணம்:
ஊ - புஷ்பரதசெட்டியாரது
கலாரத்நாகரம் என்னும்
அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதிவரு ஐப்பசிமீ.

1879

உ

முருகக்கடவுடுணை.

சாத்துகவி.

முருகதாச சுவாமிகளென்றுந்
திருப்புகழ்ச் சுவாமிகளென்றும் விளங்குகின்ற
திருநெல்வேலித்
தண்டபாணிசுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளியது

நேரிசை வெண்பா.

சங்கர னைச்சிவையைத் தந்திமுக னைக்குகனைப்
புங்கமுறு சற்குருவைப் போற்றியே—செங்கமலப்
பேர்முனிவ னுய்ந்து பிறப்பொழிக்க வேண்டினனிப்
பார்முழுதும் வாழும் படி.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

முத்திநெறி விரும்பினர்க்கோ ரினியதுணை யெனப்பழையோர்
மொழிந்த வுண்மைப்
பத்தியினை யிழந்துதவ வேடமுளார் களுட்பலர்போம்
படிநெய் தாமற்
சத்திசிபா தம்பதியக் கருதிமுயல் சிலரொடுசேர்
தகைமை யெய்திப்
புத்திமலி செங்கமல முனிவனர னுதியனாப்
போற்றி னானே.

91/1

உ

சிவமயம்.

தோத்திரப்பாமாலை.

ஸ்ரீ சற்குருநாதன் சதவாழ்த்து.

அருளுருக் கொண்ட வண்ணல் வாழ்க
ஆணவங் கெடுத்த வாதியே வாழ்க
இனத்திலென் போல்வத் தருளினன் வாழ்க
ஈனமின் முத்தியெற் கீந்தோன் வாழ்க
உன்னுதற் கரியவின் புதவினேன் வாழ்க
ஊனமார் வடிவினை யொழித்தோன் வாழ்க
என்பொரு ளாவியை யேற்றோன் வாழ்க
ஏழையென் றடிமை கொண்டோன் வாழ்க
ஐயங் கெடுத்தெனை யாண்டோன் வாழ்க
ஒன்றுநீ யல்லையென் றுணர்த்தினேன் வாழ்க
ஓங்கார மந்திர முரைத்தோன் வாழ்க
ஔவியம் போக்கிய வப்பன் வாழ்க
கழலிணை சூட்டிய கடவுள் வாழ்க
காரண காரியங் கடந்தோன் வாழ்க
கிருபையாற் பிறவி கெடுத்தோன் வாழ்க
கீழ்மையை நீக்கிய கேண்மையன் வாழ்க
குணங்குறி யில்லாக் குணமே வாழ்க
கூடா வொழுக்கங் குறைத்தோன் வாழ்க
கெடுதிக ளெல்லாங் கெடுத்தோன் வாழ்க
கேட்டதை யுணர்த்துங் கிருபையோன் வாழ்க
கைதவஞ் செலாதெனைக் காத்தோன் வாழ்க
கொலைத்தொழி னீக்கியாட் கொண்டோன் வாழ்க
கோபமுங் காமமுங் குலைத்தோன் வாழ்க

கௌவிய வினைகளைக் களைந்தோன் வாழ்க
சச்சிதா னந்த தற்பரன் வாழ்க
சாது சங்கத்திற் சார்த்தினோன் வாழ்க
சிவஞான சோதியிற் சேர்த்தோன் வாழ்க
சிவகா ருண்ணியச் செய்கையோன் வாழ்க
சுயம்பிர காச சோதியோன் வாழ்க
சூதும் வாதுந் துடைத்தோன் வாழ்க
சென்றிட மெல்லாஞ் சிறந்தோன் வாழ்க
சேதனு சேதனஞ் செறிந்தோன் வாழ்க
சையோக நித்திரை சார்ந்தோன் வாழ்க
சொன்மன மிறந்த துரியோன் வாழ்க
சோதி சொரூபமாய்த் துலங்கினோன் வாழ்க
சௌரியங் கொடுத்த தயாபரன் வாழ்க
தற்போத மற்ற சாட்சியோன் வாழ்க
தாயினுங் கருணைவைத் தாண்டோன் வாழ்க
திருவுரு வணிதிரு நீற்றோன் வாழ்க
தீவினை யெல்லாந் தீர்த்தோன் வாழ்க
துன்மார்க்க மெல்லாந் தொலைத்தோன் வாழ்க
தூய மெய்ஞ்ஞானச் சுடரோன் வாழ்க
தெளிவிலா வெனைத்தெளி வித்தோன் வாழ்க
தேவரு மறியொணுச் சிவமே வாழ்க
தையலார் வலையிற் றடைபடான் வாழ்க
தொழும்புசெய் யடியர் துணையே வாழ்க
தோன்றரு ஞானச் சொரூபன் வாழ்க
தௌத்தியங் கொண்ட தபோதனன் வாழ்க
நல்லோர்க் கருளு நாயகன் வாழ்க
நானெனு மாணவ நலித்தோன் வாழ்க
நிர்க்குண நிலையி னின்றோன் வாழ்க
நீதிக ளியாவு நிறுவினன் வாழ்க
நுண்மைப் பொருளெலா நுழைந்தோன் வாழ்க
நூன்முறை யனைத்து நுவன்றோன் வாழ்க
நெஞ்சின் வஞ்சக நீக்கினோன் வாழ்க
நேசமுள் ளன்பர் நெஞ்சினன் வாழ்க
நையா வண்ண நல்கினோன் வாழ்க

நொந்தவர்க் கருளினைத் தந்தோன் வாழ்க
நோக்காற் செனன நூக்கினோன் வாழ்க
நௌவிநேர் வந்தெனை நயந்தோன் வாழ்க
பல்பொரு ளௌவற்றினும் பதிந்தோன் வாழ்க
பார்முதற் பொருள்பா ழென்றோன் வாழ்க
பின்னு பின்னையைப் பிரிந்தோன் வாழ்க
பீடைக ளனைத்தும் பெயர்த்தோன் வாழ்க
புண்ணிய சொரூபமாய்ப் பொலிந்தோன் வாழ்க
பூதலத் தெனக்கருள் புரிந்தோன் வாழ்க
பெண்ணு ணலியெனும் பிறப்பிலி வாழ்க
பேரா னந்தப் பெருங்கடல் வாழ்க
பையவென் பாவம் பறிப்போன் வாழ்க
பொன்றாப் பொருளாய்ப் பொலிந்தோன் வாழ்க
போக்கும் வரவு மில்லோன் வாழ்க
பௌவநோ யகற்றும் பரனே வாழ்க
மனமறு பூரண மாதவன் வாழ்க
மாசிலா ஞான மருவினோன் வாழ்க
மின்னிகர் வாழ்வை வெறுத்தோன் வாழ்க
மீளா வாசையை விட்டோன் வாழ்க
முப்பாழ் கடந்த முதல்வன் வாழ்க
மூதறி வளித்த முனிவரன் வாழ்க
மெய்ஞ்ஞான வீடு மேவினோன் வாழ்க
மேலோர் போற்றும் வித்தகன் வாழ்க
மைநிகர் கண்ட மறைத்தோன் வாழ்க
மொழிமனஞ் செல்லா முன்னோன் வாழ்க
மோக்ஷங் கொடுத்த மூர்த்தி வாழ்க
மௌன நிலையின் மன்னினோன் வாழ்க
வல்லவ ரெவர்க்கும் வல்லோன் வாழ்க
வானோர்க் கரிய வானவன் வாழ்க
வித்தை யவித்தையை விழுங்கினோன் வாழ்க
வீண்பேச் சொன்றும் விளம்பான் வாழ்க
உல்லாச யோகத் துறங்கினோன் வாழ்க
ஊரும் பேரு மொருவினோன் வாழ்க
வெளியுரு வாகி விளங்கினோன் வாழ்க

வேதா கமங்களை விளம்பினேன் வாழ்க
வையகத் தடியார் வாழ்வே வாழ்க
ஒழியா வின்ப முற்றோன் வாழ்க
ஓத ரியான மொழிந்தோன் வாழ்க
அவயவங் கொண்டெனக் கருளினன் வாழ்க
ஆனந்த மான வருட்பரன் வாழ்க
சிவமுட னொன்றாய்த் திகழ்ந்தோன் வாழ்க
சீருறும் பரம தேசிகன் வாழ்க
குருவூர் தன்னிற் குருவடி வாகிக்
காட்சிதந் தென்னையாள் கருணைச்
சாட்சிநா தப்பெயர்ச் சற்குரு வாழ்கவே.

ஸ்ரீ சற்குருநாதன் சதவாழ்த்து முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சற்குருநாதன்றுணை.

உ

சிவமயம்.

ஸ்ரீ சற்குருதோத்திரம்.

ந ன் று க.

பத்திவயிராக்கியமுமத்துவிதஞானமும்பகாருமுயிர்க்கருணையும்
பாரிலிந்நான்குமேநீராலியன்னநற்பரமசற்குருவாயெழுந்
துத்தமசிவாகமமுமொருநான்குவேதமுமுபநிடதநூலுமொழியு
முரைகளைத்தேர்ந்துமெய்யுண்மையைத்தானடைந் துலகோர்களுய்யவெ
நித்தியாநித்தியமுமிகபரவிராகமுநிகழுஞ்சமாதியாறு [ண்ணி
நிரந்தரமுமோக்ஷத்திலாசையுமன்புடனிறைந்தநற்பக்குவர்க்கே
யுத்தியுடனேயனுபவங்களையுணர்த்தல்போலொருமொழியெனக்கருளுவா
யுலகினிற்புகழ்சாட்சிநாதனேயடியவர்க்குண்மைதருகுருநாதனே. (௧)

தேவனுறையாலயங்கூட்டலொடுமெழுகலுந்திருவிளக்கேற்றலுடனே
திருவடியிலர்ச்சிக்கும்வில்வமுதலாயநற்செழுமலர்ச்சோலைவைத்தே
பாவங்கடீர்த்திடும்மூர்த்திதலதீர்த்தமும்பத்தியொடுசேவைபண்ணிப்
பழவடியர்பணிவிடைகள்செய்கின்றசரியையும்பஞ்சவிதசுத்திசெய்து
காவிலுளமலர்களுஞ்சந்தனமும்வில்வமுங்கமழ்தூபதீபமுடனே
கருத்தினின்மறவாத்தியானஞ்செய்தும்பரற்கர்ச்சித்தல்செய்கிரியையு

மோவியம்போலமருமியோகமுஞ்செய்திலேனொருமொழியெனக்கருளுவா
யுலகினிற்புகழ்சாட்சிநாதனேயடியவர்க்குண்மைதருகுருநாதனே. (உ)

மனமாதியானமுக்கரணமும்வேறின்றிமாசற்றநெஞ்சினூடுன்
மலரடியையனுதினநினைந்துதுதிசொல்லியுமண்ணிற்பணிந்தெழுந்துஞ்
சனகாதிமுனிவர்களடைந்தபரஞானமேதாங்கள்பெறவெண்ணிநிற்கத்
தடையறச்சுருதியனுபவமுடனுணர்த்தநீசதாஞானவான்ந்தராய்
வனிதையர்களாசையுமண்ணாசைபொன்னாசைமக்கண்மாடாசையெல்லாம்
வையகமயக்கமிதுபொய்யென்றுகருதியேமயங்காதிருந்துகொண்டா
ருனதுதிருவடியெனதுமுடியினிற்சூடியேயொருமொழியெனக்கருளுவா
யுலகினிற்புகழ்சாட்சிநாதனேயடியவர்க்குண்மைதருகுருநாதனே. (௩)

ஐந்துவகையாகின்றபொறிகளையும்விஷயத்திலணுகாமலேயடக்கி
யாசைவழிசென்மனம்புத்தியொடுசித்தமுமானவமெலாம்விடுத்தே
சிந்தனைசெய்வாசனைகள்வந்தணுகிடாமலுன்றிருவடித்துணைநம்பியே
தேவர்களுமுனிவர்களுமியாவர்களுமகிழவேதீதிலாமுத்தியானர்
மந்தமுறுபுத்தியால்வந்தவினையறியாதுமயக்கமுளநெஞ்சனேனென்
மார்ச்சாலமானதுதான்பெற்றகுட்டியைவளர்த்திடுஞ்செய்திபோல
வுய்ந்திடத்திருவடியென்முடியினிற்சூடியேயொருமொழியெனக்கருளுவா
யுலகினிற்புகழ்சாட்சிநாதனேயடியவர்க்குண்மைதருகுருநாதனே. (௪)

அண்டரொடுமுனிவருமெண்டிசையிலுள்ளோர்களியாவருங்களிகூரவே
யடியார்களாகியசகோரமாம்பட்சிகட்கமிர்தசந்திரனையொத்தே
பண்டைவினைபோகவேநின்றிலகுசோதியேபாதமலர்முடிதரித்துப்
பரஞானமருள்செய்யவிறவாதவீட்டினிற்பாவியேனிருப்பதென்றோ
கண்டபலவடிவெலாந்தன்வடிவமாகவுங்கருதவொருவடிவிலாமற்
காண்பானுங்காட்சியுமிறந்திடச்சாட்சியாய்க்கனஞானவடிவமானோ
யுண்டுடுத்தெப்போதும்வீணிலேயலையாமலொருமொழியெனக்கருளுவா
யுலகினிற்புகழ்சாட்சிநாதனேயடியவர்க்குண்மைதருகுருநாதனே. (௫)

கங்கையிற்கமலமலர்கடன்முகட்டுதயகதிர்கண்டவுடன்விரியுமாபோற்
கதிமருவுமடியராமலர்ஞானநதியிற்கதித்துமொட்டாயிருந்தே
பொங்குபரமானந்தவாரியின்முகட்டினிற்பொலிதரும்பரிதியேநின்
பொன்னடிக்கிரணங்கள்கண்டவப்பொழுதுதான்பூரித்துமுகமலர்ந்து
கங்குகரையில்லாததிசையெங்குநின்பெருமைகழறியெப்போதுநிற்கக்
கடையேனுமதுகண்டுமிதயமலர்விரியவுங்கருதியேநின்றனையா
வுன்கமலபதமெனது சென்னிமிசைசூட்டியே யொருமொழி யெனக்கருளு
யுலகினிற்புகழ்சாட்சிநாதனேயடியவர்க்குண்மைதருகுருநாதனே. [வா

நித்தபரிபூரணசச்சிதானந்தமேநிராமயமதானவெளியே
நிர்க்குணசொரூபமேசிற்சுகப்புணரியேநிர்விடயவானந்தமே

சுத்தசிவசோதியேயத்துவிதஞானமேதுணையிலாமுத்திமுதலே
சொல்லினிலடங்காததுரியமேயென்றுதான்றொழுமடியர்பக்கமேவிச்
சித்தமுறுவினையெலாமற்றுமேநீங்கவுஞ்சிவஞானமருள்செய்குவாய்
சிறியேனுநின்பெருமையறியாதிருந்துதான்றேறுவகையறிகிலேனே
யொத்ததிருவாயினுன்முத்தியதுபெற்றிடற் கொருமொழியெனக்கருளுவா
யுலகினிற்புகழ்சாட்சிநாதனேயடியவர்க்குண்மைதருகுருநாதனே. (௭)

ஆகமந்துதிசெயுமாதித்தனிருளின்றியகிலவிருணீக்குமடியா
ரஞ்ஞானமானவிருணீங்கநீயிருளிலாதருண்ஞாயிறாகிவந்தே
தேகமுதலாகவேயிந்திரியகரணமுஞ்சிவனுமசத்தென்றுதான்
றெரிவித்துஞானமேசத்தென்றுணர்த்தவுஞ்சிவசோதிமயமதாகி
மோகமதமாச்சரியத்தன்மையுமிறந்துதான்முற்றுமானந்தமானார்
மூடவிருணீங்கியேஞானமயமாகவுன்முதிர்கருணையோடுவந்தே
மூகவனுபவமதாற்றுகமுளகாலமீதொருமொழியெனக்கருள்வா
யுலகினிற்புகழ்சாட்சிநாதனேயடியவர்க்குண்மைதருகுருநாதனே. (௮)

வேதமொழிதவறுதுமாதவஞ்செய்கின்றமெய்யடியரெப்போதுமுன்
விரைமலர்க்கழல்பணிந்தகமெலாமுருகியும்மெலிவுற்றிடும்பொழுதுநீ
போதனைகள்செய்யவேவாதனையொழிந்துதான்புவியினர்மயங்கிநிற்கும்
பொய்யுலகவாழ்க்கைதனைமெய்யல்லவென்றுபரிபூரணானந்தமுற்றார்
வாதனைகளொழியவொருசாதனையுமறியாதுமையலொடுதிரியுமென்றன்
வாக்குமனமோடுகாயங்களொருமித்துநின்மலரடிபொருந்தவெண்ணி
யோதுகலைமுழுதுமேநீதியொடுணர்ந்தநீயொருமொழியெனக்கருளுவா
யுலகினிற்புகழ்சாட்சிநாதனேயடியவர்க்குண்மைதருகுருநாதனே. (௯)

பாலர்பால்கேட்குமுன்பாகவேதாயரும்பான்முலைகொடுப்பதுபோற்
பக்ஷம்வைத்திப்போதுபிறவியாம்பசியறப்பரஞானவமுதருளுவாய்
சீலமிகுவிரதமுந்தானமொடுநேற்றவஞ்செய்யுமடியார்கள்பாலிற்
சென்றுசிவஞானமதைமுன்னைவினைபோகவுந்திருவருள்கூர்ந்துசொல்லக்
காலனும்வேதனும்வேலைகள்செய்யாதுகையோய்ந்திருக்கவென்றுங்
கரையிலாவானந்தசாகரந்தன்னிற்களிப்புற்றிருப்பதானு
ரோலமிடுமறைமுடிவுணர்ந்துமேயுய்வதற்கொருமொழியெனக்கருளுவா
யுலகினிற்புகழ்சாட்சிநாதனேயடியவர்க்குண்மைதருகுருநாதனே. (௧௦)

சற்குருதோத்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

இராகாதி பதின்மூன்றின்விஷயம்.

நாகரிகரல்குலவிரும்புவதிராகமாநயமிலபகாரமாந்துவேஷம்
நாடுபொருள்விக்கினைப்பகைப்பதுகுரோதமாநானாவிதாசைகாமம்
மோகமதுமகனாதிவஸ்துமேற்பிரியமாமுறையினீயாமைலோபம்
மொழிமதங்கிர்த்தியாகிர்த்தியந்தெரியாமைமூதன்மையாயொருவன்வா
வேகமாயவனையேசகியாமைமாச்சரியம்வெப்பமாந்துக்கம்வந்தால் [றில்
வேறொருவருக்குவரவெண்ணுகிறதீரிஷைமேலானசுகமடைந்தாற்
றுகமாய்ப்பிறருக்குவரவெணாததசூயைதனைமெச்சலேயிடம்பந்
தற்பமதுபெரியவன்றானெனலகங்காரந்தன்பிடிவிடாதபிடியே. (௧)

பரதாரம்விரும்புராகத்தினாலிராவணனைப்பலரறியராமர்கொன்றார்
பாரிலபகாரஞ்செய்துவேஷங்கொளிரணியனைப்பன்னுநாரணரழித்தார்
சுரர்மாதனேகரைக்காமமொடுபிடிநரகசூரனைக்கிஷ்ணர்கொன்றார்
துய்த்துணவுவிக்கினவீமன்மேற்குரோதபகசூரனைவீமர்கொன்றார்
கிரமமாய்த்துரியோதனன்கொடாலோபத்தாற் கீர்த்தியுறுவீமர்கொன்றார்
கெம்பீரராமர்மேன்மோகங்கொள்தசரதர்கீழ்விழுந்திறப்பதானார்
விரிவானவைசுவரியமதத்தினாலேகார்த்திவீரியார்ச்சுனன்வீட்டினின்
மேவிவருநாரதர்க்குபசரியாததான்மென்பரசுராமர்கொன்றார். (௨)

சிசுபாலன்மேலெனமச்சரங்கொண்டதாற்செருக்கறக்கிஷ்ணர்கொன்றார்
சேர்ந்தநோய்பிறருறவீரிஷைகொள்ளருணாட்சன்சிரம்வாணாசூரர்கொன்
நசிபவுண்டரிகவாசுதேவன்கொள்ளசூயையானல்வாசுதேவர்கொன்றார்[றார்
நபூருவன்யாகமதுடம்பமொடுசெய்ததான்ஞானதுருவாசர்கொன்றா
னைசுவரியமிகுதியாற்றற்பங்கொள்சதகந்தரனழிவுறச்சீதைகொன்றா
ளகங்கரங்கொண்டமதுகைடவர்கணாசமுறவளிவிஷ்ணுவேயழித்தார்
விசுவாசமாகவேமுத்தியைவிரும்புநன்மெய்யடியரொன்றுநீக்கி
விட்டவிப்பதின்மூன்றுகுற்றமதகற்றுவோர்மெய்வீடுசேர்ந்துய்வரே. (௩)

இராகாதி பதின்மூன்றின்விஷயம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி தோத்திரம்.

பரமசற்குருவாயன்றுநால்வருக்குப்பழமறைப்பொருளினையுணர்த்தி
யரகர்விழியார்மயக்கெலாமொழித்தவாதியேநீதியையுணர்ந்து
காவுகொண்டிருந்தநெஞ்சனுமுய்யக்கருணைவைத்தாளுநாளுளதோ
சுரர்முனிபரவுந்தக்ஷிணாமூர்த்திசோதியாய்விளங்கியசுடரே. (க)

சுடர்மணிக்குழையும்விளங்குசெஞ்சடையுந் துளங்குவெண்ணீறணிநுதலுங்
கடனிகர்கருணைநோக்கமும்வாக்குங்கண்டிகைதரித்தநன்மார்பு
மிடர்செயும்புலியினுடையுஞ்செம்பதமுமெளியனேன்காண்பதற்கருளித்
திடமதைக்கொடுப்பாய்தக்ஷிணாமூர்த்திசீரடியவர்க்கருள்புரிவோய். (உ)

அருளினைப்புரியுமையனேயுன்னையன்றியோர்துணையினையறியேன்
மருளினைப்புரியுமங்கையர்முதலாமண்ணுலகாசையையொழித்தே
யிருளினைநீக்கிநின்பதத்தென்னையிருத்துவாயிணையின்மெய்ஞ்ஞானப்
பொருளினையுடையதக்ஷிணாமூர்த்திபுண்ணியர்க்கருளுநற்குருவே. (ங)

குருவுருவானநின்பதம்பணிந்தகோடிலாமுனிவர்களென்றுந்
திருவுருவானசின்மயவெளியிற்சிறப்புடனிருப்பர்கணாயேன்
கருவுருவாகிச்செனிப்பொடுமரிப்பிற்கலங்கினேனின்னருளதனா
லிருவினைநீக்காய்தக்ஷிணாமூர்த்தியெளியனேனுய்ந்திடும்படியே. (ச)

படியொடுவிண்ணும்பாதலமெங்கும்பரவியநின்செயலன்றிக்
கொடியனேன்றனக்கோசெயலொன்றுமில்லைக்குறையறுகருணையங்கடலே
கடிமலர்க்கொன்றைசூடுநின்பதத்தைக்கருதுதற்கோருரைபுகன்றே
யடியனைக்காப்பாய்தக்ஷிணாமூர்த்தியருமறைச்சிரப்பொருளானே. (ரு)

சிரப்பொருளாகிவிளங்குநின்பதத்தைச்சிந்தியாதிருந்தவென்னுளத்திற்
கரப்புறுபொருளாயிருந்தனையதனாற்கதியினையடைந்திடாதசரச்
சரப்பொருளானவுலகிலேநின்றுதயங்கினேன்றயங்கிடாதிருக்கப்
பரப்பொருளானதக்ஷிணாமூர்த்திபதமருள்பக்குவமுடனே. (சு)

பக்குவமானசனகனாதிபர்கள்பன்மலர்பறித்தருச்சித்தே
விக்கினமில்லாஞானவாரிதியில்விழைவொடுமூழ்கியேசுகிப்பார்
தக்கநன்மதியாநின்பதம்விரும்பிச்சார்ந்திடாதிருந்தவென்னுளத்திற்
புக்குநின்றருள்வாய்தக்ஷிணாமூர்த்திபுலையனேன்பவமொழிந்திடவே. (எ)

பவமொழிந்தென்றுமுத்தியிலிருக்கப்பாடிலேனின்பதமலரைக்
கவலையைக்கொடுக்குமனத்தினுலிந்தக்காசினிவாழ்வினைக்கருதி
யவம்புரிந்தேனையாளுநாளுண்டோவடியரையாளுதற்கெண்ணித்
தவவுருக்கொண்டதக்ஷிணமூர்த்திதனிமுதலாகியபொருளே. (அ)

பொருளொடுமாதர்புத்திரன்சுற்றம்பொருந்தியபற்றெலாம்விடுத்தே
யிருகரங்குவித்தேநின்பதம்பணிந்தோரிருவினைக்காட்டிலேசெல்லார்
மருளொடுதிரியுமென்மனந்தன்னைமலரடிதன்னிலேயிருத்தா
யருளுருவானதக்ஷிணமூர்த்தியழிவிலாப்பேரருளோனே. (௯)

ஓமெனுமனுவையனுதினங்கருதியுன்பதமடைந்திடாதுடலைத்
தீமன்தன்னுனெனக்கருதிச்செனிப்பிலேகிடந்துழல்வேனைக்
காமனைப்பொடித்தகண்ணுடையோனேகழலிணைதன்னிலேயிருத்தாய்
பாமலர்சூடுந்தக்ஷிணமூர்த்திபாசங்களொழித்தநற்பரனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

இமையவர்முதலாயாவரும்போற்றுமிணையடியென்முடிசூட்டா
யுமைமுதலானகுழாங்களைவிடுத்தேயோகமாநெறியினிலிருந்து
சமைமுதலானகுணங்களையுடையசனகனுதிபர்களுக்கருளி
யமைவதைக்கொடுத்தேதென்முகமாகவாலடியமர்ந்தசற்குருவே. (க)

நாரணனேடுபிரமனுமறியாநம்பனேநின்பதந்தன்னைச்
சீரணிமுனிவர்போற்றிடவவர்க்குச்சிற்சுகக்கடலினையளித்தாய்
தாரணிதன்னினின்பதந்துதித்தேதமியனேனுய்யுநாளுளதோ
வாரணப்பொருளேதென்முகமாகவாலடியமர்ந்தசற்குருவே. (உ)

வேதமார்வாக்குநீற்றொளியுருவும்விளங்குசின்முத்திரைக்கரமும்
பாததாமரையுங்கோவணவுடையும்படர்சடைச்சென்னியுங்காட்டி
வாதனையொழியநீதியையுணர்த்திமன்னெனுஞானமேகொடுப்பா
யாதவன்போலுந்தென்முகமாகவாலடியமர்ந்தசற்குருவே. (க)

கூறுதற்கரியமறைமுடியதனைக்குறையறக்கேட்பதற்கெண்ணி
மாறுதலின்றிநின்பதமடைந்தமாமுனிவரற்கருள்செய்தாய்
நீறுபட்டெல்லாவினைகளுமொழியநின்னருளெனக்களிப்பா
யாறியவாக்காய்தென்முகமாகவாலடியமர்ந்தசற்குருவே. (ச)

தெருளினையுடையநின்னடியார்கள்சின்மயவடிவமாய்த்திகழ்வார்
மருளினுற்பொய்யாமுலகினைக்கருதிமாசினைப்பொருந்தியேயென்று
முருளினைப்போலச்சுழலுமென்மனத்தையுன்பதந்தன்னிலேயிருத்தி
யருளினைப்புரியாய்தென்முகமாகவாலடியமர்ந்தசற்குருவே. (௫)

துங்கமாமலரைக்கொண்டுநின்பதத்திற்சொரியுமெய்யடியர்களென்றும்
பொங்கொளிஞானவானந்தமதனைப்பூரணமாகவுண்டிருப்பார்
பங்கமாமாயைச்சேற்றினைநீங்கிப்பாவியேனுய்வதற்கென்னி
யங்கணுயருளாய்தென்முகமாகவாலடியமர்ந்தசற்குருவே. (௬)

பூதமும்பொறியுங்கரணமுங்குணமும்புலன்களுந்தோன்றுறுவிடமே
மூதறிவாகுமென்றுநால்வருக்குமொழிந்தநின்கருணையைநினைந்தே
வேதனைசெய்யும்பிறப்பினையகற்றவெண்ணியேநின்பதந்தன்னி
லாதரம்பூண்டேன்றென்முகமாகவாலடியமர்ந்தசற்குருவே. (௭)

மனத்தினுற்பற்றும்பற்றெலாம்விடுத்தேமாசிலாஞானமேவிரும்பித்
தனித்திருந்தேகாக்கிரசித்தமதனுற்றஞ்சமென்றடைந்தவர்க்கென்று
நினைத்திடற்கரியபேரறிவதனைநிலையெனவுணர்த்திவீடளித்தே
யனித்தமதொழித்தாய்தென்முகமாகவாலடியமர்ந்தசற்குருவே. (௮)

சேணுடுவிரிந்தபூதமுமுயிருந்திகழுநற்பரிதியுமதியுங்
காணுதற்கரியநின்னுருவென்றேகழறுநால்வேதமுமதனை
பூணுண்றையொழித்தேயுன்னிடாதிருந்தேயுழலுவேன்றனக்கருள்புரிந்தே
யாணவமொழிப்பாய்தென்முகமாகவாலடியமர்ந்தசற்குருவே. (௯)

உடல்பொருளாவிமூன்றையுங்கொடுத்தவொப்பிலாமுனிவர்கள்போல
மடமையேன்கொடுக்கவறிந்திடாதிந்தமண்ணுலகதனிலேசுழன்றே
னிடரெலாநீக்கிஞானவானந்தமெனக்கருள்புரியுநாளுளதோ
வடர்வினையின்றித்தென்முகமாகவாலடியமர்ந்தசற்குருவே. (௧௦)

ஸ்ரீதக்ஷிணாமூர்த்திதோத்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீகணேசர் தோத்திரம்.

அருந்தவர்துதிக்குமொற்றைவெண்கொம்புமழகிருபதமுமும்மதமும்
பரந்தநாற்புயமுநீண்டவைங்கரமும்படர்தருமாறுமாமுகமும்
விரிந்தநன்மார்புங்கண்டமுமிடையும்விளங்குபீதாம்பரவுடையுந்
திருந்தியபணியுங்காண்பனேசெல்வாசிறந்தநல்லானைமாமுகனே. (க)

அக்கரமுழுதுமகரமேமுதலாயசைந்திடுந்தன்மையைப்போல
முக்கியமானபஞ்சகர்த்தாவுமூதமிவடைந்தநன்முனிவோர்
தக்கவரியாருநின்னையேவணங்கித்தந்தொழினடத்தினர்மலத்திற்
சிக்கிடாதிருக்கப்பணிந்தனன்செல்வாசிறந்தநல்லானைமாமுகனே. (உ)

வெயிலினல்வருந்தும்புழுவினைப்போலவேதனையடைந்திடச்செய்த
கயமுகன்றன்னைவதைத்துமேதேவர்கலக்கங்கடவிர்த்தனையதுபோ
லுயிரினைக்கவ்வும்வினைகளைக்கெடுத்தேயுன்பதந்தர்தெனையாள்வாய்
செயலுடையடியார்போற்றிடுஞ்செல்வாசிறந்தநல்லானைமாமுகனே. (ங)

சூட்டுவாய்நினதுதுணையடிமலரைத்தொண்டனேன்சுகத்திலேயிருக்க
நாட்டினிற்சிறந்தவறிவினலுயர்ந்தோர்நன்மையாம்பதந்தனைவிரும்பிப்
பாட்டுடன்மனதிற்றியானமுங்கொண்டேபணிதனைப்புரிந்திடவவர்க்குத்
தேட்டமற்றிருக்கவருடருஞ்செல்வாசிறந்தநல்லானைமாமுகனே. (ச)

என்னைநீயாண்டுகொண்டிடவேண்டுமிமையவர்பதியதாயிருக்கு
மன்னவாவருளாமதம்பொழிவேழமாமுகாநின்னையேகாண
வுன்னியேநின்றேனுளத்தினிற்றோன்றியுயிர்கவர்மலத்தினைநீக்கிச்
சென்னியிற்பதத்தைச்சூட்டிடுஞ்செல்வாசிறந்தநல்லானைமாமுகனே. (ரு)

படிதனிற்பெரியோர்புகழுநின்பதத்தைப்பாவியேன்முடியினிற்சூட்டி
யடியவர்க்கருளுநற்பொருளுரைத்தேயகவிருணிக்கியேயாளாய்
வடிவினிற்சிறந்தவுமையொருபாகன்மகிழவேயுதித்தநன்மைந்தா
திடமதைக்கொடுத்தேயருள்புரிசெல்வாசிறந்தநல்லானைமாமுகனே. (சு)

ஒய்விலாப்பிறவியொழியுநாளுண்டோவுலகினைமெய்யெனக்கருதிப்
பேயனாய்த்திரிந்தபயித்தியமொழிந்துபேரின்பமுண்ணுமாறருளா
யாயுங்காலினக்குமேலொருகடவுளவனியிற்கண்டிடவில்லைச்
சேயனேனின்னைத்துதித்தனன்செல்வாசிறந்தநல்லானைமாமுகனே. (எ)

உயிப்புடன்மரியாதுயர்வுடன்குறையாதுடல்பெருத்திளைத்தலுமின்றி
மதிப்பரிதானஞானம்வந்தெனக்குமன்னுநாளெந்தநாளடியேன் [ற்
துதிப்பொடுநின்னைத்தொழுதுயானினைந்தேன்றெண்டனேனுய்யுமாறருளா
றிதிப்பிணைப்புரிந்துகாத்திடுஞ்செல்வாசிறந்தநல்லானைமாமுகனே. (அ)

இருந்திடுவஞ்சவினைகளைக்கெடுத்தேயென்மனங்கோயிலாக்கொண்டு
விரிந்தநால்வேதப்பொருடனையுணர்த்திவெம்பவமொழித்துமேயாளா
யருந்தவமுனிவோர்துதிக்குநின்பதத்தையடியனேன்றுதித்திடவடியேன்
றிருந்துமெய்யடியார்க்கருளியசெல்வாசிறந்தநல்லானைமாமுகனே. (கூ)

அருளினாலெனதுகரணவிந்திரியமைம்புலன்முழுதையுமடக்கி
மருளெலாந்தீர்த்துஞானவானந்தமன்னுதற்கோருரைபுகன்று
தெருளுநின்னடியார்கடுவினிலிருத்தாய்தேவர்கடயெலாந்தீரத்
திருவருள்கொடுக்குமுமைமகிழ்செல்வாசிறந்தநல்லானைமாமுகனே. (கO)

ஸ்ரீ கணேசர்தோத்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீநடேசர் தோத்திரம்.

அருமறைப்பொருளேயானந்தக்கனியேயம்பலத்தாடியவரசே
தெருளுடைச்சுடரோதித்திக்குந்தேனேசெழுமறைபுகன்றநற்றேவே
யிருண்மலப்பகையைக்கடந்திடும்படியேயிணையடிமுடியினிற்சூட்டி
யருளுநற்குருவேயடைக்கலம்புகுந்தேனபயனேசபையினாயகனே. (க)

கொஞ்சியமுகத்தாயிரஞ்சிதவாக்காய்குறைவிலாவானந்தநடத்தாய்
வஞ்சனைபுரியுநெஞ்சினன்மெலிந்தேன்மலரடித்தஞ்சமேகொடுத்துச்
செஞ்சொலின்மறையின்விஞ்சியவாக்காற்சிறியனேன்சஞ்சிதமொழித்தே
யஞ்சலென்றருளாயடைக்கலம்புகுந்தேனபயனேசபையினாயகனே. (உ)

வேதமேவேதப்பொருடனைவிரிக்கும்வித்தகாவானந்தநடனா
மாதவர்க்கருளுமாசிலாமணியேமாயவன்கண்மலர்சாத்தும்
பாதனேபாதமுடியினிற்சூட்டிப்பாவியேன்பிறவிநோயொழிப்பா
யாதியேயுன்றனடைக்கலம்புகுந்தேனபயனேசபையினாயகனே. (ந)

விண்ணுளோர்காணப்பண்ணுளோர்பாடவீரகண்டாமணியொலிக்க
மண்ணுளோர்துதிக்கவுமையவள்களிக்கமாயவன்மத்தளந்தொனிக்க
நண்ணுதற்கரியநிருத்தனஞ்செய்தநாதனேநாயினுங்கடையே
னன்னலேயுன்றனடைக்கலம்புகுந்தேனபயனேசபையினாயகனே. (ச)

உனதுமுக்கண்ணுங்கண்டமுமிடையுமொப்பிலாவானந்தநடமுங்
கனமறைசொலிக்கும்வாக்குநின்செயலுங்கண்டவர்க்கருள்செய்வாய்கடை
மனமுதனான்குங்குணமொருமூன்றுமலவினையிரண்டுமேயொன்ற [யேன்
வனகனேயுன்றனடைக்கலம்புகுந்தேனபயனேசபையினாயகனே. (ரு)

கானமேதிரியுமிருகம்போல்விடயக்காட்டிலேதிரியுமென்மனதோ
டீனமாமாக்கையொழித்துமெய்ஞ்ஞானவுருவமாய்நிற்குநாளுளதோ
வானவர்போற்றும்பாம்பும்வெம்புலியுமகிழவேசபைதனிற்றிகழு
மானந்தநடனாவடைக்கலம்புகுந்தேனபயனேசபையினாயகனே. (சு)

பத்தியாய்நினைந்தேயுருகுமெய்யடியார்பவப்பிணியகற்றியேயவர்க்கு
நித்தியானந்தவீட்டினைக்கொடுத்துநிருத்தனஞ்செய்திடுநிமலா
வெத்தனைபிறப்போவெடுத்துநானுழன்றேனினிவரும்பிறப்பினுக்கஞ்சி
யத்தனேயுன்றனடைக்கலம்புகுந்தேனபயனேசபையினாயகனே. (எ)

வையகச்சுகமும்வானகச்சுகமுமறந்துநின்மலரடிச்சுகமே
பையவேநுகர்ந்துகளிக்குமெய்யடியார்பணிசெய்தேயுய்யுநாளுளதோ
செய்யதோர்கனகசபையினினடனஞ்செய்திடுஞ்சிற்சுகவடிவே
யையனேயுன்றனடைக்கலம்புகுந்தேனபயனேசபையினாயகனே. (அ)

வேண்டியேயென்றும்பதஞ்சலிமுனியும்வியாக்கிரபாதரும்பணியக்
காண்டரப்பொன்னம்பலத்திலேநின்றுகனையிலாநிருத்தனஞ்செய்த
தாண்டவாவுனதுசரணமேகொடுத்துத்தமியனேன்பிறவியைக்கெடுத்தே
யாண்டருள்செய்வாயடைக்கலம்புகுந்தேனபயனேசபையினாயகனே. (கூ)

சிற்சுகக்கடலேநிர்க்குணவடிவேசின்மயமாகியவெளியே
சொற்குணமிறந்தநற்குணமலையேதொண்டருக்கருள்புரிநடனா
கற்குணமனத்தையுருகிடச்செய்துகருணைவைத்தாளுதற்கெண்ணி
யற்குணநீக்காயடைக்கலம்புகுந்தேனபயனேசபையினாயகனே. (க0)

ஸ்ரீ நடேசர்தோத்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீ உமாதேவியார் தோத்திரம்.

அன்னையேயடியேனடைக்கலம்புகுந்தேனடியிணைதன்னையேசூட்டி
யென்னையுங்காத்தனின்கடனாகுமிமயமாமலைதனிலுதித்த
கன்னியேயுனதுகருணையேயன்றிக்கடையனேன்செயலொன்றுங்காணே
னுன்னதமாகக்கடவுளோர்பாகமுற்றிருந்தருள்புரியுமையே. (௧)

மங்கையர்க்கரசேமாநிலம்பூத்தமடந்தையேநின்னருள்வழங்கி
யங்கயற்கண்ணும்பங்கயமொத்தவழகியபதமுநல்லிடையுந்
தங்கவாபரணமணிந்திடுமார்புந்தயவுசெய்முகமுமேகாட்டி
யுன்கையாலணைத்தாள்கடவுளோர்பாகமுற்றிருந்தருள்புரியுமையே. (௨)

நற்றவம்பூண்டமாதவர்க்கருளுநாயகிநின்னையேயன்றி
வெற்றியும்பலமும்வீரமுஞ்செயலுமேதினிதன்னிலேவந்து
பெற்றதோர்தாயுமிலையெனவுணர்ந்தேன்பேதையேன்வாழ்ந்திடும்படியே
யுற்றதுசொல்லாய்கடவுளோர்பாகமுற்றிருந்தருள்புரியுமையே. (௩)

ஆகமவேதகலையெலாந்துதிக்குமடியிணைகருதுமெய்யடியார்
மோகமதொழிந்துநற்பதமடைவார்முடிவிலாவாசையாங்காட்டிற்
காகம்போற்சுழன்றுதிரியுமென்மனதுன்கழலிணைதன்னிலேயிருக்க
ஊகமேகொடுப்பாய்கடவுளோர்பாகமுற்றிருந்தருள்புரியுமையே. (௪)

இதமதேபுரியுமடியருக்கிரங்கியின்பமேகொடுத்திடுந்தாயே
பதமலர்முடியிற்சூட்டுவாய்நாயேன்பவக்கடல்கடந்துமேயுய்யச்
சதமதென்றெண்ணிநின்பதமடைந்தேன்றமியனேற்கோருரைபுகன்றே
யுதவியேபுரிவாய்கடவுளோர்பாகமுற்றிருந்தருள்புரியுமையே. (௫)

வேதமும்வேதப்பொருளுமாய்விளங்கிமேதினியெலாம்படைத்தளித்தாய்
காதலாலுன்னைத்தேடினேனென்றுங்கருத்தினிற்குடியதாயிருந்தே
பாதகமானதொழிலினைநீக்கிப்பழமறைமுடியினற்பொருளை
யோதலேபுரிவாய்கடவுளோர்பாகமுற்றிருந்தருள்புரியுமையே. (௬)

பண்ணுளோரிசையும்விண்ணுளோர்துதியும்பாரினிற்கேட்டருள்புரிவாய்
கண்ணினுண்மணியாயுயிரினுக்குயிராய்க்கருத்தினுட்கருத்ததாந்தாயே
யெண்ணியவினைகளியாவுநீயொழித்தேயினிமையாம்ஞானவானந்த
முண்ணவேசெய்வாய்கடவுளோர்பாகமுற்றிருந்தருள்புரியுமையே. (௭)

பன்மொழிகேட்டுக்கன்மனமுருகிப்பவந்தனைநீங்கியானுய்ய
நன்மொழியுடையவடியர்பாலிருத்தாய்நாயகிநின்பதம்விரும்பிப்
புன்மொழிப்பாவாற்புலையனேன்றுதித்தேன்புலவர்கள்பழித்திடாதிருக்க
வுன்மொழியருள்வாய்கடவுளோர்பாகமுற்றிருந்தருள்புரியுமையே. (௮)

எத்தனைபிறப்போவெடுத்துநானுழன்றே னினியொருபிறப்பையும்வேண்டே
னித்தியமானபூரணியுனதுதிருமலப்பதந்தனைக்கருதிப்
பத்தியாற்றுதித்தேன்பாவலர்நிந்தைபண்ணிடாதிருக்கவேயருள்வா
யுத்தமர்போற்றுங்கடவுளோர்பாகமுற்றிருந்தருள்புரியுமையே. (௯)

ஆழியையனையபிறவியைநீக்கியருளெனக்களித்திடவேண்டி
பாழினிற்செல்லாதிருக்கவென்மனத்தைப்பண்ணுதலின்கடனுகு
மேழ்வகைப்பிறவியொழியமெய்யடியாரிணைமலர்ப்பதந்தனைத்துதிக்க
ஆழ்வினைதவிர்ப்பாய்கடவுளோர்பாகமுற்றிருந்தருள்புரியுமையே. (௧௦)

ஸ்ரீ உமாதேவியார்தோத்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

௨

சிவமயம்.

ஸ்ரீ முருகேசர் தோத்திரம்.

ஐங்கரன்றுணைவாசங்கரன்புதல்வாவம்பிகைபெற்றிடுங்குமரா
பங்கயமலரிலிருந்திடும்பிரமன்பணிந்திடும்பதமலர்முடியிற்
றங்கிடவென்றுதரிப்பதோவறியேன்சற்குருவடிவமாய்வந்தென்
பங்கமதகற்றியுய்ந்திடும்படியேபரகதியளித்தலுன்கடனே. (௧)

சரவணபவனேயரவணியுடையோன்றந்தநற்கந்தனேவந்தென்
சிரசினிலுன்றன்றிருவடிசூட்டித்தீவினையெலாமொழித்தருள்வா
யுரைமனமிறந்தவொப்பிலாவொளியேயுள்ளத்தின்மாசெலாமொழிக்கும்
பரமனேயடியேனுய்ந்திடும்படியேபரகதியளித்தலுன்கடனே. (௨)

முந்துறுதவமும்புரிந்திலனதனுன்மூதுணர்வெனக்கிலைநீங்காச்
சிந்தையினிருளுந்தீர்வதற்கடியேன்செய்வகையின்னதென்றறியே
னந்தியிற்றோன்றும்பிறையணியுடையோனருமையாய்வளர்த்திடுங்குமரா
பந்தமதொழித்தேயுய்ந்திடும்படியேபரகதியளித்தலுன்கடனே. (௩)

காவிநுக்கரசன்வளர்த்திடுந்தெய்வயானையுங்கானகவேடர்
பூவையுங்களிக்கும்புயமுடையோனேபுண்ணியாநின்னருளதனாற்
றேவர்கடுதிக்குந்திருவடியென்றன்சிரத்தினிற்சூடுவதன்றிப்
பாவங்களொழித்தேயுய்ந்திடும்படியேபரகதியளித்தலுன்கடனே. (ச)

ஞானவென்றேசுரரொலாமமுதந்துய்த்திடச்செய்தநின்பெருமை
பேரறிவுடையோர்பேசுவதொன்றும்பித்தனேன்பேசிடவறியேன்
சீரொலாம்பெற்றசெல்வனேவேலாதீவினையெலாமொழித்தருளிப்
பாரினிலடியேனுய்ந்திடும்படியேபரகதியளித்தலுன்கடனே. (ரு)

குருவுருவாயகத்தியற்கருளுங்குமரனேசரவணபவனே
முருகனேகுகனேமொழிவதற்கரியமுத்தனேசித்தத்தினிற்கு
மிருளினைப்போக்கவேகமாஞானவெழிற்சுடர்காட்டுவதன்றிப்
பரவியநெஞ்சமுய்ந்திடும்படியேபரகதியளித்தலுன்கடனே. (சு)

அறுமுகத்தழகும்பன்னிருதோளுமருமறைபுகன்றிடும்வாக்கு
நறுமணங்கமழுங்கடம்பமர்மார்புநல்லருள்பாலிக்கும்பதமுஞ்
சிறுமையையுடையேன்றெரிசிக்கவென்றுதிகழுவாய்சித்திரமயிலாம்
பறவைமீதமர்ந்தோயுய்ந்திடும்படியேபரகதியளித்தலுன்கடனே. (எ)

குன்றுதோறாடுங்குமரனேயமரர்குறைகளைத்தீர்த்தவாநாயேற்
கென்றுநீவந்தென்குறையெலாந்தீர்ப்பாயெளியனேனறிந்திலேனின்னை
யன்றியோர்தெய்வம்பணிந்திலனேயாயருமறைமுடிவினையருளிப்
பன்றியிற்கடையேனுய்ந்திடும்படியேபரகதியளித்தலுன்கடனே. (அ)

திருவினிற்சிறந்தோயறிவினிலுயர்ந்தோய்தேவர்கடுதிந்திடும்வேலா
விருவினைக்காற்றுற்சருகுபோற்பரந்தேனிருந்திலேன்றிருவடியிடத்தே
கருவினிலுதியாவகையெனக்களிக்கக்கன்மனம்பழுத்திடநினைத்துப்
பருவமாய்ச்செய்தேயுய்ந்திடும்படியேபரகதியளித்தலுன்கடனே. (கூ)

வேலனேமயிலோய்வீரனேதூயமெய்மையாம்பதத்தினிற்றங்குஞ்
சீலமாமுனிவோர்க்கருளினையதுபோற்சிறியனேற்கருளுவதறியேன்
காலனையுதைத்தவரன்மகிழ்மதலாய்கந்தனேநொந்தவர்க்கருளும்
பாலனேயடியேனுய்ந்திடும்படியேபரகதியளித்தலுன்கடனே. (க0)

ஸ்ரீ முருகேசர்தோத்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீ சண்டேசர்தோத்திரம்.

அன்னையும்பிதாவுமரனுடனுமையுமன்றிவேறில்லையென்றெண்ணி
யுன்னதமானபேரன்புகொண்டேயுள்ளத்தினிற்சிவத்தையேயிருத்தித்
தன்னுருவெல்லாஞ்சிவனுருவாகிச்சனனமாங்கடலினைக்கடந்தோ
யென்னையாட்கொள்வாய்கனிந்தநல்லன்பாமீசனேதிருச்சண்டேசுரனே. ()

அனித்தியமாகுமானிடயாக்கையருமையாய்க்கிடைத்ததென்றெண்ணிச்
செனித்தநற்பிறப்பினுய்க்கிடனீனைத்தேசிவனையேபூசனைபுரிந்தாய்
மனத்தினுலுன்னைப்பணிந்திடும்படியேமலரடிமுடியினிற்சூட்டி
யெனக்கருள்புரிவாய்கனிந்தநல்லன்பாமீசனேதிருச்சண்டேசுரனே. (௨)

அருமறைக்குலமேயற்புதக்குணமேயருளினைப்பெற்றதோரன்பே
கருணையாம்வடிவேதிருமறைமுழுதுங்கற்றநற்றேவனேகருத்திற்
றெருளுருவாகுஞ்சிவத்தையேயிருத்திச்செனனமாங்கடலினைக்கடந்தோ
யிருளினைக்கெடுப்பாய்கனிந்தநல்லன்பாமீசனேதிருச்சண்டேசுரனே. (௩)

ஆவினைமேய்த்தேபாலினைக்கரந்தேயமுகுடன்மணலினைக்குவித்தே
மேவியலிங்கமாகவேசெய்துமென்முடிதன்னிலேசொரியுந்
தேவனேயுனதுசேவடிபணிந்தேன்சிறியனேனுய்வதற்கெண்ணி
யேவலையருள்வாய்கனிந்தநல்லன்பாமீசனேதிருச்சண்டேசுரனே. (௪)

உலகெலாம்புகழுஞ்சேய்ஞலூரிருந்தேயொப்பிலாப்பத்தியேவிளங்கக்
கலைமதிமிலைந்தவீசனார்பூசைகருதியேமனத்தினுற்செய்த
தலைவனேயுன்னைத்தஞ்சமென்றடைந்தேன்றமியனேற்கருடனைப்புரிந்தே
யிலகுவாயென்றுங்கனிந்தநல்லன்பாமீசனேதிருச்சண்டேசுரனே. (௫)

இன்பமேபெருகவிருளெலாநீங்கவிணையிலாப்பத்தியேபுரிந்து
துன்பமேதோன்றாச்சோதியேயுன்னைத் தொண்டனேன்வணங்கியேநின்றே
னென்பவமொழிந்துநன்பதமடையவெனக்கருள்புரிந்துநீயாள்வா
யென்பெலாமுருகுங்கனிந்தநல்லன்பாமீசனேதிருச்சண்டேசுரனே. (௬)

பத்தியேயுருவாய்ப்பரமனேபொருளாய்ப்பாரினிலிச்சையேயின்றிச்
சித்திரம்போலமனத்தனைநிறுத்திச்சிவத்தையேபூசனைபுரியு
நித்தனேயுன்னையனுதினம்பணிந்தேனியெனக்கருடனைப்புரிவா
யித்தரைபுகழுங்கனிந்தநல்லன்பாமீசனேதிருச்சண்டேசுரனே. (௭)

சோதியாய்ச்சுடராய் விளங்கியசிவத்தைத் தொழுதலேபொருளெனக்கொ
பாதகமானவினைசெயாவின்னைப்பாவியேன்பணிக்கிடுகின்றேன் [ண்டு
வாதனையொழியக்காதலோடெனக்குமனவிருணீக்கியேஞான
மீதலேபுரியுங்கனிந்தநல்லன்பாமீசனேதிருச்சண்டேசுரனே. (௮)

சித்தனைபண்ணிப்பான்முதலாகச்சிறந்திடுமஞ்சனமாட்டி
நந்தனவனத்தின்மலரையுங்கொண்டுநாதனைப்பூசனைபுரியத்
தந்தையுங்கண்டேயிகழ்ந்திடர்செய்யத்தாளிணைவெட்டுதல்புரியு
மெந்தையேயருள்வாய்கனிந்தநல்லன்பாமீசனேதிருச்சண்டேசுரனே. (௯)

வாழையுங்கமுகும்பலாவுடன்மாவும்வளர்ந்தருஞ்சேய்ஞலூரிருந்தே
கோழைகளின்றிமறையெலாமுணர்ந்தேசோக்களின்பாலினைக்கறந்தே
தாழைசூழ்நதியின்மணலினாலிங்கஞ்சமைத்தபிடேகமேசெய்தோ
யேழையேற்கருள்வாய்கனிந்தநல்லன்பாமீசனேதிருச்சண்டேசுரனே.(௧௦)

ஸ்ரீ சண்டேசர்தோத்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீ பஞ்சமூர்த்திகளந்தாதி.

ஸ்ரீ கணேசர்தோத்திரம்.

அருளேவடிவாய்விளங்குகின்றயானைமுகனேநின்சரணப்
பொருளையுதவிப்புலையேனைப்புரத்தல்நினக்கேகடனாகு
மருளுமனத்தான்மயங்குகின்றேன்மயங்காதிருக்கும்வகைபுகல்வாய்
தெருளுமடியாருளத்திருக்குந்தெவிட்டாவமுதேசெந்தேனே. (௧)

தேனேபாலேசெங்கரும்பின்றெளிவேபழமேசீனியே
கோனேயானைமுகமுமொருகொம்புமிரண்டுபதமலருந்
தானேதோன்றியெனக்குனருட்டாளின்றன்பெருங்கருணைக்
கீனமுண்டோசொல்லிடுவாயெளியேனுய்யவறியேனே. (௨)

அறியாச்சிறியேன்பொறிவழியேயலைந்தேநொந்தேவாடுகின்றேன்
குறியுங்குணமுமிலாதிருந்துங்குறியாய்த்தோன்றுநின்குறியை
யறியும்வண்ணமெனக்கருள்வாயானைமுகத்தாய்மும்மதத்தாய்
நெறியேசெலுத்தியென்மனத்தைநீங்காவின்பந்தந்திடுவாய். (௩)

தந்தைதாயாயிருந்தெனக்குச்சரணமலரைக்கொடுத்திடுவாய்
முந்துமுந்துதேவர்கட்குமுதல்வனாவாய்முடிவில்லாப்
பந்தமுத்தியிரண்டினுக்கும்பதியாயிருப்பாய்பழவடியார்
சிந்தைகுளிரவருள்பொழிவாய்திகழும்வேழமுகமுடையாய். (௪)

வேழமுகங்கொண்டருளுகின்றவிமலாநின்றன்விரைமலர்த்தாள்
வாழவென்றன்மனத்திருந்தேமாறாவினையைமாற்றிடுவாய்
பாழின்மனத்தைப்பொருந்தாதபரமவடியார்பணிவர்நினைச்
சூழுந்தேவர்துயர்களையுஞ்சொருபாசுருதிப்பொருளோனே. (௫)

சுருதிப்பொருளேயரன்புதல்வாசூழுமடியார்க்குறுதுணைவா
திருமான்மகிழுமுதன்மருகாதேவர்குழாங்களகம்வருவாய்
பருமாமணியாற்செய்பதக்கம்பரிக்குமார்பாவேழமுகா
குருவாய்த்தோன்றியெனதுளத்திற்குடியாயிருந்தாலிருள்வருமா. (௬)

மாயாப்பிறவிதனைநீங்கிமாதாவுதரமருவாதே
நாயேனிருக்குநாளுளதோநன்மைபுரியும்வேழமுகா
நேயர்சூழுநின்பதத்தைநித்தந்துதியேசெய்கின்றேன்
பேயேன்மையலொழிவதற்கேபெருகுங்கருணைதனைக்கொடுப்பாய். (௭)

கொடுப்பாயுனதுதிருவடியைக்கொடியேன்முடியிற்றரிக்கநித
நடிப்பாலுன்றனடியார்போனாயேன்றினமும்பணிகின்றேன்
றடுத்தாட்கொள்வதுன்கடனாந்தமியேன்றனக்கோர்செயலில்லை
வடிப்பாமானைமுகமுடையவாழ்வேமேலோர்சூழ்தேவே. (௮)

தேவேயானைமுகமுடையாய்சிரமுங்கழுத்துமார்பிடையும்
பாவேபொழியுநல்வாக்கும்பருத்தபுயமுங்கண்ணிரண்டு
மூவர்முதலோர்துதித்திடுவர்மூடமனதாற்றுதியாத
பாவியாகுஞ்சிறியேனும்பவநோயொழிந்துவாழ்வேனே. (௯)

வாழவிளங்குங்கண்மணியேமனத்திலிருந்தேயருள்புரியும்
வேழமுகனேநினைப்பணிந்துமெலியாதிருக்குநாளுளதோ
ஊழினையும்வினைப்போகமுண்டுசுகித்துமேல்வினையைப்
பாழதாச்செய்மெய்யடியார்பரவிப்பணியுந்திருவருளே. (௧௦)

முற்றிற்று.

௧

சிவமயம்.

ஸ்ரீ நடேசர்தோத்திரம்.

அருமறைமுடியினின்றேயன்பர்பாலிரக்கமுற்றுத்
திருவுருக்கொண்டுவந்தேதேவர்மாமுனிவர்காணப்
பெரியதோர்சபையின்கண்ணேபேரின்பநடனஞ்செய்தோய்
மருவுமென்பவத்தைநீக்கிமலரடிமுடியில்வைப்பாய். (௧)

வையகர்தன்னிலியாருமயங்கிடாதிருக்கவெண்ணிப்
பையவென்வினையாங்காடுபற்றியேநீறாய்வேகச்
செய்யதோர்கண்ணுற்றாராய்த்திருவருட்பார்வையாலே
ஐயமில்வீடுசேர்ப்பாயானந்தநடனங்கொண்டோய். (௨)

கொண்டகல்விரதத்தாலேகூற்றினைவென்றுரொன்றே
யண்டர்மாமுனிவர்போற்றுமரியமார்க்கண்டர்செய்த
தொண்டுகள்செய்தேனில்லைதூயமெய்ப்பதத்திற்சேரப்
பண்டுசெய்நடனங்கண்டுபாவியேனுய்வதென்றோ. (௩)

பாவியேன்மனமும்வாக்குங்காயமுநின்பால்வைத்தே
சேவடிபணிந்துவாழ்த்தித்தியானமுஞ்செய்யாநின்றேன்
மேவியவினைகடீர்த்தேமெலிந்திடாவண்ணங்காப்பாய்
கூவியதொண்டர்காணக்குறைவிலாநிருத்தஞ்செய்வோய். (௪)

நிருத்தனஞ்செய்யும்பாதநிழலிலேயிருத்தியென்னை
வருத்தியவினைகடீர்த்தேவஞ்சனையுய்யக்கொள்வாய்
கருத்திடுங்கண்டத்தோடுகபாலமுமழுவுமானும்
விரித்தசெஞ்சடையுங்காணவிளங்குவாயென்றன்முன்னே. (௫)

என்றனையடியானாகவிருவினையொப்பதாக்கி
நன்றருட்பார்வைவைத்தேஞானோபதேசஞ்செய்யு
நின்றனைமறந்துநாயேனீணிலத்துழலாநின்றேன்
கன்றினுக்கிரங்குமாப்போற்கருணைசெய்நடனஞ்செய்வோய். (௬)

நடனமேசெய்யாநின்றநாதனேநாயேன்கொண்ட
வுடல்பொருளாவிதன்னையொருங்குடன்கவர்ந்துகொள்ளுங்
கடனுனதாகையாலேகளித்தவென்மனமாங்கோயிற்
றடையிலாநடனஞ்செய்துசார்ந்தவம்மூன்றுங்கொள்ளே. (௭)

கொள்ளும்பொழியேயையர்தாகக்கொடுத்தாய்நின்றன்வாயார
விள்ளும்பொருள்கேட்டிடச்செவியும்விளங்குந்தலையாற்பணிந்திடவு
முள்ளநினைக்காண்கண்களுடனுணாத்துச்சுவைக்கநாவையுமே
தெள்ளுநடனமலர்வாசமறியமூக்கேசெல்லலேனே. (அ)

மூவாமறையின்பொருளானமுதலேசிறியேன்வினைதடிந்து
காவாவிடிலோகடையேனைக்காப்பாரிலையேகண்ணுதலாய்
தேவாதேவர்தொழுதேத்துஞ்சிற்றம்பலத்தேநடஞ்செய்வோய்
சாவாதெனக்குநின்பாதஞ்சார்ந்துபிழைக்கும்வகையுரையாய். (கூ)

உரையாலபயகரத்தாலேயுன்னுங்கருத்தானேக்காலே
திரையார்பிணியானசிக்கின்றசெனனக்கடலைக்கடத்தியருட்
கரையாநடனபாதத்தைக்கடையேன்முடியிற்சூட்டிடுவாய்
பரையாமுமையாள்வீற்றிருக்கப்பாகங்கொடுத்தவருமறையே. (க0)

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஸ்ரீ உமாதேவியார்தோத்திரம்.

பாகத்தரனுர்வைத்திருக்கும்பரையேவினைகளொழிந்துசிவ
யோகத்திருக்குநாளுளதோவுரையாயுமையேயுனதருளான்
மோகக்கடலைக்கடந்துயர்ந்தமுத்திக்கரையிற்சேர்ந்திருப்போர்
பாகத்தமர்ந்தேயடியேனும்பவநோய்நீங்கிவாழ்வதற்கே. (க)

வாழ்வைப்பெறுதற்குமையேநின்மலர்த்தாடுதித்துவணங்காது
தாழ்வைப்பெற்றுத்தளர்கின்றேன்றளராதடியேனுய்யுநெறி
கேள்வியறிவாலுணரும்வண்ணங்கிருபைபுரிவாய்நினதுபதஞ்
சூழ்வோரடையும்பேரின்பந்தொண்டனேற்குமுண்டாமோ. (உ)

உண்டோவிமயமலையுதித்தவுமையேயுனதுதிருவுருவி
லண்டர்போற்றுஞ்சங்கரனுக்காசைப்பெருக்குமிகவளர
வண்டுசூழுமலர்க்கூந்தல்வளர்த்தாயெனதுபவநோய்கள்
விண்டேநினதுபதமலரைமேவியுய்யுங்காலமதே. (௩)

காலனுனதுகணவனொருகாலால்வீழவிறைஞ்சிநின்ற
பாலனடைந்தபெரும்பேறும்பரவுமடியார்பெறும்பேறு
மேலாமுலகில்வீற்றிருக்கும்வேதன்முதலோர்பெறும்பேறுஞ்
சீலமிகுந்தவுமையேசிறியேற்கருளுநாளுளதோ. (ச)

நாளுங்கழியநமனுரும்கலியவுலகிற்பெண்மயலை
வேளுமேவப்பிரமனுமேவிநித்தவுடலைச்சுமந்துமிகக்
கோளின்பகையைக்கடவாதகொடியேன்வாடாதுய்யும்வகை
யாளுமுமையேநின்பதங்களன்றிமற்றொன்றறியேனே. (ரு)

அறிவேசொரூபமாகிநிறைந்தடியாரகத்திற்றோன்றுகின்ற
குறியுங்குணமுமெனதுளத்திற்குறித்தாயிலையேகொடியேனுஞ்
செறியும்பவத்தில்வீழ்ந்திளைத்தேதேறும்வகையொன்றறியாமல்
வறிதேநின்றேனிக்காலும்வந்தாட்கொள்வாயுமையவளே. (சு)

உமையேயுனதுதிருமுலைப்பாலுண்ணும்படியேகாழிதனி
லமருஞானசம்பந்தர்க்களித்தாயதனாலகமகிழ்ந்தே
யிமையோரடையாப்பெரும்பதத்தையெண்ணிலாதவுயிர்களுக்கு
மமையவளித்தேயவர்களுடனடைந்தாரிந்தவகிலத்தே. (எ)

அகிலம்போற்றுமுமையேநீயடியாரகத்தில்வீற்றிருந்தே
முகில்போற்கருணைபொழிந்ததனுன்முடிவிலாதபேரின்ப
மகிழ்வோடருந்திவாழ்ந்திருந்தார்மலிந்தவினையால்வருந்திமிக
வகிலத்தடியேனுழலாதுன்னருளானந்தந்தனையளிப்பாய். (அ)

அளிப்பாயுலகேழத்தனையுமறிவாய்விளங்குநின்னுருவங்
களிப்போடுணருமெய்யடியார்கருத்திலிருக்குமுமையேநீ
யொளிப்பாயிராதுவதனமுடனுபயசரணந்தனையெனக்கே
யளிப்பாயளவிற்பேரின்பமருந்திவினைகளொழிந்திடவே. (கூ)

ஒழிந்தமனத்தாலுன்னுகின்றவுபயசரணந்தனைச்சேர்ந்தே
யிழிந்தபிறப்பையென்றொழிவேனென்றாயுமையேயினிதருளைப்
பொழிந்துமடியேன்வல்வினையைப்போக்கியுன்றன்பொற்பாத
மமுந்தமுடியிற்றரித்திடுவாயரனார்பாகத்தமர்ந்தவளே. (க0)

முற்றிற்று.

௨

சிவமயம்.

ஸ்ரீ முருகேசர்தோத்திரம்.

அரனார்மகிழுஞ்சிறுமதலாயாறுமுகனேபொதியமலைக்
கரகந்தாங்குக்குறுமுனிவன்கருதிப்பணியுங்கழலுடைய
பரமகுரவாதெய்வானைபாகாவெனதுபவநீங்கச்
சரணகமலந்தனைக்கொடுத்தேதமியேனுய்யும்வகையுரையாய். (க)

உரையாய்காவேயெப்பொழுதுமுன்னாய்மனமேயுரிமையுடன்
சிரமேவணங்காயருள்கொடுத்துச்செனனமரணமறுத்திடவே
யிரவும்பகலுமறவாதேயெண்ணுமடியாருளத்திருந்து
பரமானந்தந்தனைக்கொடுத்தேபவத்தைநீக்குமுருகனையே. (௨)

முருகாவுன்னைமறந்தடியேன்முத்தியுணரேன்றிருமாலின்
மருகாவருணகிரிநாதன்மகிழ்ந்துபாடுநற்கீரன்
பிரமனரனார்குறுமுனிவன்பேணித்துதிக்குநின்னுடைய
வரியபாதமலர்துதித்தேயடியேனுய்யுநாளுளதோ. (௩)

உளதோமுருகாவுன்னுடையவுபயபாதத்திருவழகும்
வளமாமாறுமுகத்தழகும்மார்பினழகும்பன்னிரண்டு
நளினமனையகரத்தழகுநான்மூன்றானகண்ணழகு
மிளமைப்பருவவடிவழகுமெல்லாங்காணுநாளெனக்கே. (௪)

எனக்கேமுருகாவுன்னுடையவிணையாம்பாதமலர்கொடுப்பாய்
கனத்தபுகழோனிந்திரன்றன்கன்னியொருபாலிருந்திடவும்
வனத்திலிருக்குங்குறமகளைமணந்தேயணையும்புயமுடையா
யனத்தனறியாப்பிரணவத்தினருத்தம்புகலும்பரகுருவே. (௫)

குருவேயுன்றன்கருணையினாற்கொடியேன்பவநோயொழித்திடுவா
யரவாபரணன்களித்திடவேயருமாமறையின்முடிபுகலும்
பரமானந்தப்பழம்பொருளேபரவுமடியாருளந்தனிலே
விரவிவாழ்வாயெனதுளத்தின்மேவப்பணிந்தேனுமைமைந்தா. (௬)

மைந்தாகந்தாவடிவேலாமாலின்மருகாமுருகேசா
வெந்தாய்குமராகடம்பமலரிரவும்பகலுஞ்சூடுகின்ற
சிந்தாமணியேயுன்னுடையதிருவாய்மலர்ந்துமறைமுடிவைத்
தந்தாலடியேனுய்ந்திடுவேன்றயவுபுரிவாயறுமுகனே. (௭)

முகத்தாற்கண்ணாற்பணிகளினான்முறுவனகையின்மொழிகளினா
லகத்தான்முலையாலிடைகளினாலரியநடையாலுடைகளினாற்
சுகத்தைமயக்கும்பெண்மயலைச்சாராதெனக்குநின்பாத
சுகத்தைக்கொடுப்பாய்வேன்முருகாதொண்டேனென்றுமுய்ந்திடவே. (௮)

என்றுமாறுமுகமுடையாயினியபாதநிழல்கொடுப்பாய்
கன்றாநெருங்கும்பழனிமலைகலைகள்புகலுஞ்சாமிமலை
நன்றாய்விளங்குங்குன்றமலைநறவுபொழியுஞ்சோலைமலை
குன்றாக்கைலைமலைமுதலாக்குலவுஞ்செந்திமலையிருந்தே. (௯)

இருந்தேயுன்றனடியானாயிருக்குவண்ணம்பிறவிதனை
யரிந்தேயெனதுகுறைதீர்ப்பாயமரர்க்கிடராஞ்சூர்க்குலத்தை
வருந்தும்படியேவேரறுத்தவடிவேலுங்கும்புயமுடனே
திருந்துமாறுமுகங்கண்டேசிவையுமாறுமகிழ்கோவே. (௧௦)

முற்றிற்று.

௨

சிவமயம்.

ஸ்ரீசண்டேசர் தோத்திரம்.

மகிழுங்கோவேசண்டேசாமனிதப்பிறப்பினுய்வதற்கே
நிகழுமனத்தாலனித்தியத்தினிலையையுணர்ந்தேகைவிடுத்துப்
புகழுஞ்சிவத்தினிலையுணர்ந்தேபூசைபுரியுநின்செயலை
யிகழுந்தந்தைதாடுணித்தாயெளியேன்செயலற்றிருந்தேனே. (௧)

இருந்தேன்பவத்திற்சண்டேசாவிறைவன்பதமேபொருளென்று
புரந்தவாவின்பாறன்னைக்கடவுண்முடியிற்பொழியும்வணம்
பரந்தமனவாக்குடன்மூன்றும்பத்திமயங்கொண்டொருமித்துச்
சுரந்தவுனதுபேரன்புதொண்டனேற்குமுண்டாமோ. (௨)

உண்டோமணலைச்சிவலிங்கவுருவமாகச்செய்துகொண்டே
தொண்டேபுரியுஞ்சண்டேசாதொழுதுநினைத்துத்துதியாதேன்
பண்டேபிறந்திங்கென்னபயன்பரமன்பூசைப்பிரசாத
முண்டேயிருக்குநின்பாதமுன்னித்துதிக்குந்திறமெனக்கே. (௩)

திறமாமுனதுசேவடியைச்சென்றுவணங்காநாயேனை
யுறவுகொள்ளுநாளுளதோவுலகம்போற்றுஞ்சண்டேசா
நறவுபொழியுங்கொன்றையுடனாகம்பூணுமிறைவர்பதங்
குறையாச்செல்வமென்றெண்ணிக்கூர்ந்தவன்புசெய்பொருளே. (௪)

பொருளுமருளுமிறைவனலாற்பொருள்வேறுண்டென்றெண்ணாத
தெருளுமனத்தாற்சிவபூசைசெய்துநிற்குஞ்சண்டேசா
விருளான்மறைப்புண்டுனைக்காணாதிருந்தேனாயேனெப்போது
மருளேகொண்டிங்கலைகின்றேன்மயக்கந்தீரவருள்புரிவாய். (௫)

தீராப்பிறவிதனையொழித்தேசிவன்றாள்சேர்ந்தநின்பாதஞ்
சேராதிருக்குங்கன்மனத்தின்செயலையொழிக்குஞ்செயலருள்வாய்
நீராயுருகும்பேரன்பானின்றன்பணியேபுரிந்துய்ய
வாராத்துயர்தீர்சண்டேசாவன்பர்வினைகளைந்தாண்டோய். (௬)

ஆண்டேயெனதுவினைநீக்கியரியமறையின்முடிவருளாய்
வேண்டிநின்றேனின்பாதமேலோர்போற்றுஞ்சண்டேசா
நீண்டவனதுபேரன்பைநிந்தக்துதித்துவணங்கியருள்
பூண்டேயிருக்குமெய்யடியார்பொன்னங்கழலைத்துதித்திடவே. (௭)

ஆதியாதிருக்கும்பாவியுன்றன்றுணைத்தாள்சேர்ந்தேயுய்வதற்கென்
மதியிலிருந்தேயருள்புரிவாய்வானோர்போற்றுஞ்சண்டேசா
கதியேகொடுக்குநினதருளைக்கண்டேனிலையேகடையேனு
மதியைமுடியிற்சூடுமரன்மகிழுஞ்செயலையுடையானே. (௮)

உடையாய்நின்னைக்கண்டுதொழவொருகாற்பேரன்புதித்திடுமோ
கடையேன்சனனமொழிந்துபரகதியிற்சேருநாளுளதோ
விடரோசெய்ததந்தைபதமிரண்டுந்துணித்தேசிவபதத்தை
யடைவாய்ப்பெற்றசண்டேசாவடியேன்றனக்கேயருள்செய்வாய். (௯)

செய்யாநின்றேனின்பணியைத்திருத்தாளென்றன்முடிசூட்டி
யையாவுய்தற்கோருளாயையருள்வாயென்றன்பவமொழிய
கையின்மழுமான்றரித்தசிவன்கண்டுமகிழுஞ்சண்டேசா
மையலொழிந்தபெரியோர்கண்மனத்தின்மகிழுந்திருவருளே. (௧௦)

ஸ்ரீ பஞ்சமூர்த்திகளந்தாதி முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீ காசி அன்னபூரணியம்பாள் தோத்திரம்.

நித்யபரிபூரணியானந்தசாகரீநிராமயமதானரூபீ
நேசமுளவன்பர்கணெஞ்சினிற்குடியாகநிற்கின்றசிவசொரூபீ
சத்துவகுணமுதலாங்குணங்களுமிறந்தபரசச்சிதானந்தவடிவீ
சாயுச்சியபதமாய்விளங்குபரமுத்தியைத்தமியனேற்கருள்புரிகுவா
யெத்தனையுகங்களோமெய்யினைத்தாங்கியேயிவ்வுலகவாழ்க்கைதன்னி
லிரவுபகன்மோகாந்தகாரத்திருந்துமேயெண்ணாதவெண்ணிநின்றே
கத்தனாயிருந்தயான்முத்தியைவிரும்பியுன்கழலிணைபிடிப்பதென்றோ
கங்கைசூழ்காசிதனில்வாழன்னபூரணீகருணையுளகுணரூபியே. (௧)

அருவாகியுருவாகியருவுருவமாகியேயகிலாண்டகோடியாகி
யணுவினுக்கணுவாகிமகத்தினுமகத்தாகியாதிநடுவந்தமாகி
சுருதிவடிவாகியேகடன்மலையதாகியேசொல்லினுட்பொருளாகியே [இ
துன்பினுடனின்பாகிபோக்குடன்வரத்தாகித்தொன்மையிற்றன்மையா

யிருளொளியதாகியேதெருண்மருளதாகியேயிணையிலாப்பொருளாகியே
யென்னுடையுள்ளத்திருக்குமறிவாகியேயிவையெலாமல்லவாகிக்
கருவாகுமெழுவகைத்தோற்றமுமின்றிடுங்கன்னியேயுனைப்பணிந்தேன்
கங்கைசூழ்காசிதனில்வாழன்னபூரணிகருணையுளகுணரூபியே. (௨)

பலகோடியண்டங்களினுமலின்றுமேபல்லுயிர்க்குயிராகியும்
பாரினிற்காத்துமேமுடிவினிற்சங்காரம்பண்ணியுமறைத்தல்செய்து
நலமாகவிருவினைகளொப்பாகுநாளினினுன்மறையின்முடி வருளியு
நற்கதிகொடுத்திடுநின்பாததாமரைநாயினேன்காண்பதென்றோ
மலமாயைநீங்கவேகலைஞானவழியினைமாறுதறிந்துவாழ
மதியொன்றுமில்லாமற்கதிகண்டுகொள்ளாதுமயங்கியேசுழலுகின்றேன்
கலசநேர்முலையினுன்மெலிகின்றவிடையளேகண்ணினாற்பார்த்தருளுவாய்
கங்கைசூழ்காசிதனில்வாழன்னபூரணிகருணையுளகுணரூபியே. (௩)

எந்நேரமும்முனதுசன்னிதியினின்றுதாளென்மனம்மழலின்மெழுகா
யிடையறாதுருகவும்வாக்கதுதுதிக்கவுமிருகரங்குவிசெய்யவும்
பன்னுநான்மறையினதுமுடிவினில்விளங்கிடும்பரஞானமருள்செய்யவும்
பக்ஷம்வைத்தென்னையாளுச்சிதமதானவிப்பாரிலுளமுனிவரியாரு
முன்னுதற்கரிதாந்தவங்களைச்செய்துதானுன்பதந்தனைமருவியே
யொப்பிலாப்பேரின்பசாகரந்தன்னிலேயொழியாதுமூழ்கிற்பார்
கன்னியர்களிருபுறங்கவரிகள்வீசவேகளிப்புடன்வீற்றிருக்குங்
கங்கைசூழ்காசிதனில்வாழன்னபூரணிகருணையுளகுணரூபியே. (௪)

நாயகிகுணாதீதநாதாந்தரூபியேநான்மறையின்முடிவினிற்கும்
ஞானவானந்தியேபானலங்கண்ணியேநயமாயிருக்குமனையே
தூயமலர்கொண்டுநின்பாதத்திலர்ச்சனைசோராதுசெய்யுமடியார்
சுத்தபரிபூரணசித்தியானந்தஞ்சுகித்திருந்தினிதுவாழப்
பேயனேனின்பாதபெருமைதனையறியாதுபேருலகில்வாழுகின்றேன்
பேரருளின்வடிவாகிமனதினிற்குடிகொண்டுபேரறிவுதன்னையீந்தே
காயமுங்கரணமுமாயத்தழுந்தாதுகாத்தருள்வதுன்கடமையாங்
கங்கைசூழ்காசிதனில்வாழன்னபூரணிகருணையுளகுணரூபியே. (௫)

யோகமும்ஞானமுமட்டமாசித்தியும்முலகிலுளபல்போகமு
முயிரினுக்குயிராகுநின்பதம்வணங்குநல்லுத்தமர்களடைவரதுபோல்
மோகவிருணீங்கியேசோதிவடிவாகவுமூதறிவுபெற்றெநாளு
முத்தியிலிருக்கவும்பாததாமரையினின்முடிவில்பேரன்புபூண்டு
தேகமனவாக்கினுனின்றொண்டுபுரிகின்றசீர்பெற்றவடியர்பாலிற்
சிறியனேன்றன்னையுஞ்சேராதிருப்பதுதிருவுளக்கிருபையாமோ
காகவிழிபோலவேயலைகின்றபாவியேன்கதிகண்டுவாழ்வதென்றோ
கங்கைசூழ்காசிதனில்வாழன்னபூரணிகருணையுளகுணரூபியே. (௬)

செல்வமும்வீரமுமுதாரமும்வெற்றியுஞ்சிறந்தாற்கருணைவடிவுக்
திகழ்கின்றவன்னையேநின்னடியர்கடுவினிற்சிறியேனும்வாழ்ந்திருக்கக்
கல்வியும்ஞானமும்புண்ணியமுநன்மையுங்கருதரியமகிழ்விஞேடு
கருத்தினினின்பதவிருப்பமுஞ்தியானமுங்கனிவுடனெனக்கருளுவாய்
பல்விதமதாகின்றமாடமுறுகோபுரப்பந்தியிலமைந்திருக்கும்
பார்த்திடற்கருமையாஞ்சித்திரப்பதுமையும்பவழநிகர்தூண்வரிசையுங்
கல்விபயில்கிள்ளையுமயில்களுங்குயில்களுங்கலந்துவளர்கோயின்மேவிக்
கங்கைசூழ்காசிதனில்வாழன்னபூரணிகருணையுளகுணரூபியே. (எ)

வேதமுங்கீதமும்பாடலுமாடலும்விளங்குநின்கோயின்மேவி
விழைவுடன்வலம்வருஞ்சீரடியருள்ளத்தின்மேவியேதிகழுமுன்றன்
பாததாமரையிணையனுதினங்கருதியேபழிபாவநீங்கியென்றும்
பரகதியடைந்துதானுய்வனேபூமியிற்பன்னாளும்வாழ்ந்திருந்தே
மாதர்கண்மோகமாங்கடலிலேவீழ்ந்துதான்மாறுதசுழலுவேனே
வையமும்வானமும்பணிகின்றவன்னையேவாய்மொழி யெனக்கருளுவாய்
காதலொடுதேவர்முனிவரரோடுமானிடர்கலந்துநாடோறுமூழ்குங்
கங்கைசூழ்காசிதனில்வாழன்னபூரணிகருணையுளகுணரூபியே. (அ)

கொலையினெடுபொய்யையுங்களவையுங்கள்ளையுங்கொள்ளாதுவிடுதலோடு
கூறரியவாசையுந்தள்ளியேநின்பதங்கூடியெந்நாளும்வாழ்வோர்
மலையிலும்வனத்திலுமாற்றிலுநெருப்பிலுமன்னியேவுடல்வருத்தார்
மாசற்றவானந்தஞானமதுணர்ந்துதான்மாறுதவின்பமுறுவார்
சிலைமனமதானவறிவில்லாதபேதையுன்திருவடிப்புணைபிடித்தே
சித்தமுறுகாமமும்வெகுளியுநீங்கியேசிவானந்தமுறுவதென்றோ
கலையெலாம்புகழ்கின்றவன்னையேயென்மனக்கள்ளமதொழித்தருளுவாய்
கங்கைசூழ்காசிதனில்வாழன்னபூரணிகருணையுளகுணரூபியே. (கூ)

முல்லையுங்கொன்றையுமல்லிகையும்வெட்சியுமுருகுவிரிமந்தாரையு
முன்னுதற்கரிதானதாமரையுமல்லியுமுகினிறக்குவளைமலரு
நல்லதொருகூதமுமலரியுஞ்சண்பகமுநயமானகோங்கமலரு
நவில்மாவிலிங்கையுங்கிளுவையுநொச்சியுநல்விளவினெடுவில்வமுஞ்
சொல்லரியபத்தியாற்றூயமுனிவரரெலாஞ்சோராதுகொண்டுவந்துன்
றுணையடியிலர்ச்சித்தலன்றியேபாமாலைசூடுவதறிந்தியானுங்
கல்லனையநெஞ்சினையுருக்கவேபாமாலைசமுறினேன்கொண்டருளுவாய்
கங்கைசூழ்காசிதனில்வாழன்னபூரணிகருணையுளகுணரூபியே. (க0)

ஸ்ரீ காசி அன்னபூரணியம்பாள் தோத்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

௨

சிவமயம்.

ஸ்ரீ காசிவிசுவேசர் தோத்திரம்.

அன்பருக்கன்பாயருளுநற்குருவேயானந்தமயமதாம்பொருளே
யின்பமேகொடுக்குமிறைவனேயென்றுமிணையிலாக்கருணைமாநிதியே
வன்பனேன்மனத்தினிருளெலாம்போக்குமாசிலாஞானமேகொடுப்பாய்
நன்பதமுடையாய்காசியாம்பதிக்குநாதனேவிசுவநாயகனே. (௧)

ஆகமுங்கொடுத்தேபோகமுங்கொடுத்தேயருள்செயப்பாகமும்பார்த்தே
மோகமுங்கெடுத்தேயூகமுந்தந்தேமுத்தியையளித்திடநினைத்தே
வேகமேகொண்டுதிரியுமென்மனத்தைமென்மலர்ப்பதத்தினிலிருத்தாய்
நாகமேபூணுங்காசியாம்பதிக்குநாதனேவிசுவநாயகனே. (௨)

வாசமாமலர்களேசமாயெடுத்துமாசிலாப்பதத்திலேசாத்திப்
பூசனைபுரியாக்காசனுமிருக்கும்புலையனையாள்வதற்கென்னே
தேசனேசிறந்தவீசனேயருளாற்சிறியனேன்செய்திடும்பாவ
நாசமேசெய்வாய்காசியாம்பதிக்குநாதனேவிசுவநாயகனே. (௩)

தேடினேனென்றுங்கூடியேயிருக்கச்செழுமறைதுதிக்குநற்றேவே
பாடிடாதுன்னைவாடிடுமென்றன்பவப்பிணியகற்றியேயாள்வாய்
சேடியர்போற்றுமுமையொருபாகாதிருவடிமலரையேதுதித்து
நாடினர்க்கருளுங்காசியாம்பதிக்குநாதனேவிசுவநாயகனே. (௪)

போதனேபோதவானந்தமோனபுண்ணியருளத்திலேயிருக்கு
நீதனேநீதிப்பொருடனையுணர்த்திநித்தியானந்தமேகொடுப்பாய்
சேதனுசேதனமற்றிடம்பொருளாய்த்தேறினர்க்கருடனைப்புரியு
நாதனேசோதிக்காசியாம்பதிக்குநாதனேவிசுவநாயகனே. (௫)

மாயவன்முதலாந்தூயமெய்யடியார்மாசிலாமனத்தினுள்ளி
யாயுநற்பொருளேபேயனேன்காணவருளுருவாகவேதோன்றிக்
காயமும்வாக்குங்கரணமுமுனதுகழலிணைதன்னிலேவைத்தேன்
நாயினேற்கருளுங்காசியாம்பதிக்குநாதனேவிசுவநாயகனே. (௬)

புலன்வழிச்செலுத்தாதென்னைநல்வழியாம்பூசனைபுரிந்திடற்கென்னி
மலவிருடுறந்துபலகலையருளிமலர்ப்பதந்தன்னையேகொடுப்பாய்
நிலவுடன்கொன்றைமலர்தலைசூடுநித்தனேதித்திக்குந்தேனே
நலமிலேனென்றுநித்தேன்காசியாம்பதிக்குநாதனேவிசுவநாயகனே. (௭)

இல்லமேதுறந்துசெல்பவர்போற்றுமீசனேமாசிலாமணியே
கல்லிலும்வலிதாமென்மனந்தன்னைக்கருணையாற்கனன்மெழுகாக்கச்
சொல்லினேனின்பாற்புல்லியேன்றலையிற்றுணையடிசூட்டியேயாள்வாய்
நல்லவர்க்கருளுங்காசியாம்பதிக்குநாதனேவிசுவநாயகனே. (௮)

பாவியேனின்னைச்சேவியேனின்றுபாடிலேன்பரிமளப்பூவைக்
காவிலேசென்றுதாவியேயெடுத்துக்கழலிணைசாத்திலேன்றேவே
யாவியேயுன்னைக்கூவுமெய்த்தொண்டரடைந்தநற்பதத்தையேமேவ
நாவினாற்றுதித்தேன்காசியாம்பதிக்குநாதனேவிசுவநாயகனே. (௯)

கன்றினைப்பிரிந்தவாவினைப்போலக்கனிவுடனென்மனதுருக
வென்றுநீவந்தேயருடனைப்புரிந்துமென்மனங்குடியதாயிருப்பா
யன்றுநால்வருக்கவ்வாலடியமர்ந்தேயருமறைபுகன்றநற்பொருளே
நன்றியேபுரியுங்காசியாம்பதிக்குநாதனேவிசுவநாயகனே- (௧௦)

ஸ்ரீ காசிவிசுவேசர் தோத்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீ காசி விசாலாக்ஷியம்பாள் தோத்திரம்.

சீரணிகமலையிலக்குமிபோற்றுஞ்செல்வியேசிறப்பினிலுயர்ந்த
பூரணியுனதுபொற்பதங்கண்டுபுலையனேனுய்யுநாளுளதோ
தாரணிமுழுதுமொருங்குடன்பூத்தசங்கரிபொங்கொளிவிரிந்த
வாரணம்புகழுங்கங்கைசூழ்காசியமர்விசாலாக்ஷியாமனையே. (௧)

வானுளதேவர்வையகமனிதர்மறுவறும்பாதலம்வாழ்வோ
ரூனமில்புலவர்நான்மறையுணர்ந்தவொப்பிலாமுனிவர்கள்விரும்பு
ஞானநாயகியுன்னற்பதமடையநாயினேன்விரும்பியேநின்றேன்
யானுறுந்துறைசேர்கங்கைசூழ்காசியமர்விசாலாக்ஷியாமனையே. (௨)

மையலைக்கொடுக்குமாதரையிகழ்ந்துமாமணிவிளக்கினையொத்த
தையலேயுனதுசரணமேபுகுந்துதமியனேனுய்யுநாளுளதோ
பையராவணிந்தசடையினையுடையபரமனோர்பாகத்திற்புகுந்தே
யையமற்றிருக்குங்கங்கைசூழ்காசியமர்விசாலாக்ஷியாமனையே. (௩)

மலந்துறுமுடலைச்சுமந்துநானிந்தமண்ணிடைவாழ்ந்திடக்கருதி
யலைந்தநாணிங்கினின்பதவாழ்வையடையுநாளுணர்ந்திலனினது
நலந்தனையுணர்ந்தமுனிவருக்கருளுநற்பதங்கொடுத்துமேயாள்வா
யலைந்தெறிதிரைவாழ்கங்கைசூழ்காசியமர்விசாலாக்ஷியாமனையே. (௪)

பிணியெலாமிருக்கும்பெட்டியாமுடலைப்பேணிடாதுன்பதம்பேணுந்
துணிவெனக்கருள்வாய்சுடர்மதியணையசுந்தரிநிரந்தரங்கருதிப்
பணிதனைப்புரியுமன்பர்கட்கிரங்கிப்பவப்பிணியகற்றியேயாள்வா
யணிகலனென்னக்கங்கைசூழ்காசியமர்விசாலாக்ஷியாமனையே. (௫)

பூமுடிகுழலுந்திலதம்வாழ்நுதலும்பொங்கொளிமுறுவலுமிதழும்
பாமொழிவாக்குமருள்புரிநோக்கும்பணைமுலைத்தோள்களுங்கரமுஞ்
சேமணிக்கலையாரிடையுமென்பதமுந்தெரிசனங்கொடுத்தெனக்கருள்வா
யாமைமீன்வாழுங்கங்கைசூழ்காசியமர்விசாலாக்ஷியாமனையே. (௬)

அருவமாயுருவாயருவுருவடிவாயகணிதசொரூபமாயனைத்துந்
தருபொருளாகிநிற்குநின்செயலைத்தமியனேனுணர்ந்திடற்சமியேன்
றிருவெலாமுடையசெல்வியேயெனதுதீவினைநீக்கியேயாள்வா
யரன்விரிசடைவாழ்கங்கைசூழ்காசியமர்விசாலாக்ஷியாமனையே. (௭)

பாடவுமறியேன்படிக்கவுமறியேன்பாரெலாம்புகழுநின்பதத்தைக்
கூடவுமறியேன்கூடுமெய்த்தொண்டர்குழாத்துடனிருக்கவுமறியே
னிடுலகதனிற்பிறந்துநானிறவாநிலையினைக்கொடுக்குநாளுளதோ
வாடவராடுங்கங்கைசூழ்காசியமர்விசாலாக்ஷியாமனையே. (௮)

மாசிலாமதிபோல்விளங்குநின்வடிவைமனமெனும்விழியினாற்கண்டு
தேசுறுஞானம்விளங்குநின்வாக்கைத்தெளிந்தநல்லறிவினாலுணர்ந்து
பாசமதகற்றிப்பரமவானந்தம்பருகிடநினைந்திடாதேகு
மாசையையொழியாய்கங்கைசூழ்காசியமர்விசாலாக்ஷியாமனையே. (௯)

பொறையுநற்றயவுமடக்கமுமுண்மைபுகன்றிடும்வாக்குநல்லறிவும்
மறைமுடியுணர்ந்தமுனிவர்பாற்செல்லு மனத்தையுங்கொடுத்தெனக் கருள்
நறைமலர்மாலைசூடுமென்றோளில்நயந்தபாமாலையுஞ்சூடி [வாய்
யறைதருமுலகிற்கங்கைசூழ்காசியமர்விசாலாக்ஷியாமனையே. (௧௦)

ஸ்ரீ காசி விசாலாக்ஷியம்பாள் தோத்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

௨

சிவமயம்.

ஸ்ரீ காசிக்காலவயிரவர் தோத்திரம்.

பூவுலகதனிற்பிறந்தநல்லறிஞர்புண்ணியப்பயன்றனைவிரும்பிப்
பாவமாந்தொழில்களனைத்தையுநீக்கிப்பன்மலர்கொண்டரிச்சித்தே
மேவுதற்கரியநின்பதம்பணியமேல்வினையடைந்திடாதவனாக்
காவல்கொள்காலவயிரவநாதாகழலிணைபணிந்தனன்காப்பாய். (௧)

சுபாவமாய்விளக்கும்பூரணவறிவிற்சுகமுடனிருந்தன்பருய்ய
வுபாதிசெய்கொடியவினைகளைநீக்கியுன்னருளேக்கினையளித்தாய்
தபோதனர்வாழுந்தாருகாவனத்திற்றையலர்மயங்கவேபலிக்குக்
கபாலங்கொள்காலவயிரவநாதாகழலிணைபணிந்தனன்காப்பாய். (௨)

பிரமனார்சிரத்தையறுத்திடுமுன்றன்பெருந்தடங்கையுமிரதனு
மிருவினைத்தளைக்களைந்திடற்கெண்ணுமெளியனேனுய்ந்திடும்படியே
திருமதிதவழுஞ்சென்னியும்பதமுந்தெரிசனங்கொடுத்தன்பர்வினையைக்
கரவுகொள்காலவயிரவநாதாகழலிணைபணிந்தனன்காப்பாய். (௩)

ஸ்ரீ காசிக்கால வயிரவர்தோத்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீ நந்திதேவர் தோத்திரம்.

அந்தியும்பகலுநின்னடியிணைவழுத்தியே
பந்தமதொழிந்திடாப்பாவியுய்ந்திடச்
சிந்தையினின்றருள் செய்திடக்கருதினே
னந்தலிலருளுடை நந்திதேவனே. (க)

விண்ணவர்துதிக்குநின்மெய்ப்பதந்தனைக்
கண்ணினிற்காணவேகருதிநின்றனன்
புண்ணியஞானமாம்பொருளுணர்த்தியே
நண்ணியவினையொழிநந்திதேவனே. (உ)

காமமும்வெகுளியுங்கழன்றுநின்றிருப்
பூமலர்ப்பதந்தனைப்பொருந்தவெண்ணியே
தீமொழிநீங்கவென்சிந்தைவந்துநின்
னாமமேதுதிக்கருணந்திதேவனே. (௩)

உற்பவமரணமுமொழிவதற்குறு
கற்பனையகற்றியேஞானக்கண்ணினாற்
சொற்பனஞ்சாக்கிரஞ்சுழுத்திநீங்கிய
நற்பதம்பெறவருணந்திதேவனே. (௪)

உம்பருமியாவருமொதுங்கிநின்றிடச்
சம்புவின்சந்நிதித்தண்டநாயகா
வெம்பவநீங்கவென்வினைகளைந்திடாய்
நம்பினேனின்பதம்நந்திதேவனே. (௫)

ஸ்ரீ நந்திதேவர் தோத்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

௨.

சிவமயம்.

இரத்னகிரிமாலை.

விநாயகர்வணக்கம்.

சீரானை மாமுகத்துச் சிற்பரனைச் சிந்தித்துப்
பேரான ரத்னகிரிப் பெம்மான்மேற்—சீராகச்
சாற்றுதமிழ் மாலையினைச் சார்ந்தெவரு முத்திபெறப்
போற்றுவனே யானவன்றாட் போது.

வீரக் கழலானே மின்னுங் குழையானே
தாரம் புயத்தானே சங்கரனே—நீரணிந்த
வேணியனே ரத்னகிரி வேந்தே பவங்கடத்துந்
தோணிதா நீயே துணை. (௧)

எல்லா முணர்ந்த விறைவாநின் பொன்னடிக்கே
கல்லா மனத்தாற் கசிந்துருகி—நில்லாது
போயிடினோ ரத்னகிரிப் புண்ணியா நின்கருணை
வாயினாற் கூவாய் வலிந்து. (௨)

பொன்போ லொளிரும் புரிசடையாய் வெண்ணீற்றா
யென்போ லொருவரிலை யிவ்வுலகிற்—புன்போக
முண்டு மயங்கி யுழலுகின்றேன் ரத்னகிரித்
தண்டமிழோ யென்வினையைத் தாக்கு. (௩)

சென்னிதனிற் கங்கையுடன் திங்களையுஞ் சூடியருள்
மன்னுகின்ற ரத்னகிரி மன்னவனே—யின்னமுநான்
மாண்டு பிறவா வழியொன் றருள்புரிய
வேண்டினே னெப்பொழுது மே. (௪)

திருநுதலிற் றங்குகின்ற தீக்கண்ணா லென்ற
விருவினையை நீறாக்க வேண்ணாய்—பருதிமதிக்
கண்ணினா லேயுலகைக் காண்கின்ற ரத்னகிரிப்
புண்ணியா வென்னுட் புகுந்து. (௫)

ஆதியந்த மில்லாத வம்பரமாய் நின்றதையு
மோதரிய மாதோ டுறைவதையு—மேதினியிற்
கண்ணினாற் பார்த்துய்யக் காதலொடு ரத்னகிரி
யண்ணலே யென்முன் னமர். (௬)

வேழமுரி மேற்போர்த்தி வெம்புலித்தோல் மேழுடுத்தி
வாழுமணி நாகமதை மார்பணிந்து—சூழுகின்ற
மானைக் கரத்தணிந்து மன்னிநிற்கும் ரத்னகிரி
வானவனே யென்னுளத்தே மன்னு. (எ)

வெண்டலையும் வெண்கொம்பு மேலணிந்து நின்றவனை
யண்டரெலாம் போற்று மருமைதனைக்—கண்டடியேன்
றேத்திரித்தேன் ரத்னகிரிச் சோதியனே யெந்நாளுங்
காத்தருள்வ துன்றன் கடன். (அ)

ஆனந்தமான வருட்குருவே மேலான
மோனந்தா வுய்வதற்கு மூதுலகி—லீனந்திர்
தேவரெலாம் போற்றுகின்ற சீர்பெற்ற ரத்னகிரி
நாவலனே யன்பா னயந்து. (கூ)

மலையனுர் தேடுமுன்றன் மாபதத்தைச் சிந்தித்துச்
சிலமுனி வோர்பரவுஞ் செல்வனே—பாலனது
நெஞ்சமே கோயிலா நின்றிடுவாய் ரத்னகிரிச்
செஞ்சடையாய் நீயே தெளிந்து. (௧0)

வேதமொழி ரத்னகிரி வித்தகா நின்சிவந்த
பாதமலர் சூடுதற்குப் பாவியேன்—காதலா
லல்லும்பகலு மருந்தவத்தைச் செய்யாது
செல்லுகிறேன் வீணே திகைத்து. (௧௧)

நாகமணி ரத்னகிரி நம்பனே நின்புகழைப்
பாகமதாய்ப் பாடுவார் பாவலர்கள்—தோகைமயில்
வாகனனைப் பெற்றெடுத்த வள்ளலே யான்புகழ
லாக மருள்வாயு வந்து. (௧௨)

எண்ணுகின்ற மெய்யடியார்க் கின்பமே செய்துநிற்கும்
புண்ணியா வுன்னையே போற்றுதற்குக்—கண்ணேக்காய்
சந்து மகிழ்விளவு தான்வாழும் ரத்னகிரிச்
சுந்தரனே யிப்போது சூழ்ந்து. (௧௩)

தொல்லை மறைதேடுஞ் சோதியே ரத்னகிரி
வல்லவனே நின்பதத்தை வந்தித்தேன்—பல்லூழி
காலமெலா மாதா கருப்பைக்குட் சென்றிருந்து
மாலறிவு கொண்டேனை மன்னு. (௧௪)

பன்னாளு நின்பதத்திற் பாவியேன் சூழ்ந்திருக்க
வுன்னா திருந்தே னுடையானே—யென்னுவி

கொள்ளும் பொருளுடனுங் கொள்ளுவாய் ரத்னகிரி
வள்ளலே யிப்போது வந்து. (௧௫)

பூவுலகில் நாயேன் புலம்பித் திரியாமற்
சேவடியைத் தோத்திரித்தே தேறுதற்கு—மேவரிய
சீராரும் ரத்னகிரித் தேவனே யெந்நாளுந்
தீராத வெவ்வினையைத் தீர். (௧௬)

மாலும் பிரமனு மற்றொழிந்த தேவர்களுங்
காலமெலாம் போற்றிசெய்யுங் காவலனே—சீலமொடு
பத்திசெய்து ரத்னகிரிப் பாவலனே மெய்ஞ்ஞான
சித்திபெறு நாளெந்நாள் செப்பு. (௧௭)

அன்பர்க ணெஞ்சத் தகலாம லேயிருக்கு
நின்பதத்தைச் சிந்தைவைத்து நேசிக்க—வின்பந்
தரவேண்டும் ரத்னகிரித் தாணுவே யென்வினைகள்
காவுசெயும் வண்ணமுநீ காண். (௧௮)

தானந் தவமனைத்துத் தந்தருளி நாயேனை
யானந்த வெள்ளத் தழுத்துவாய்—தேனுந்து
கொன்றை மலர்சூடுங் கோமானே ரத்னகிரிக்
குன்றுடையாய் நீதயவு கொண்டு. (௧௯)

உம்பரெலாம் போற்று முனது திருப்பதத்தை
நம்பினே னெப்பொழுது நாயடியேன்—றும்பிமுகக்
கையானை வேலவனைக் காதல்செயும் ரத்னகிரி
யையா வினைதீர்த் தருள். (௨௦)

இங்கக்குந் தாணு யிருக்கின்ற ரத்னகிரிப்
புங்கவனே யென்னுடைய பொய்வினையைத்—தங்காமற்
பாழ்பண்ணி யுன்றன் பதமலரை யெப்பொழுதும்
வாழ்கநினைந் தென்னுளமே வை. (௨௧)

மதிசூடி ரத்னகிரி மாமலையின் மேலே
பதியா யிருக்கும் பரனே—கதிபெறவே
சென்னியினி லுன்றன் திருவடியைச் சூட்டுவா
யுன்னு மனதி லுவந்து. (௨௨)

தங்கமலர் சூடுகின்ற சங்கரா வுன்றனிரு
செங்கமலப் பொற்பாதஞ் சேவியேன்—பங்கமெலா
நீங்கிச் சிவயோக சித்திவாயிற் றங்குதற்கே
யோங்கு மணிமலையா யோது. (௨௩)

பாணியிலே யோர்மானும் பாகத்தி லோர்மானும்
வேணியிலே யோர்மானு மேன்மையுடன்—பூணுவது
பாழாக்கா திவ்வுலகைப் பன்னாளுங் காப்பதற்கோ
தாழா மணிமலையாய் சாற்று. (௨௪)

இருவினையை நீக்கி யெனையாளவேண்டுங்
கருவழியிற் செல்லுமுனே கண்டு—திருமதிசேர்
செஞ்சடையாய் கண்ணுதலாய் சீர்பெற்ற ரத்னகிரி
நஞ்சுடைய கண்டா நயந்து. (௨௫)

ஊன்பொதிந்த காயத்தை யுண்மையென நின்றுடைய
தேன்பொதிந்த பூம்பதத்தைச் சிந்தியேன்—மான்பதிந்த
பாணியாய் ரத்னகிரிப் பாதிமதிச் செஞ்சடையாய்
காணியா நின்பதமே காட்டு. (௨௬)

என்புதசை தோலா லெடுத்தவிந்தப் பொய்யுடலை
யன்புவைத்தே யெந்நாளு மாதரித்தே—னன்கமைந்த
வேதா வணங்குகின்ற வித்தகாரத்னகிரி
நாதா வெனையா ணயந்து. (௨௭)

கண்ணீரும் வாய்நீருங் காணுஞ் சிறுநீரும்
வெண்ணீருஞ் செந்நீரும் வேர்வையொடு—புண்ணீருந்
தங்கு மலவுடம்பைச் சாராதே ரத்னகிரிக்
கங்கைசூழ் சென்னியனே கா. (௨௮)

காற்றாற் சரிகின்ற காயத்தை நம்பியுனைப்
போற்றா திருந்த புலையேனை—தேற்றாயேற்
செய்ய திருவடியைச் சேராதே ரத்னகிரி
யையனே வீணி லலைவேன். (௨௯)

துற்கந்தமே யிருக்குந் தூலமல வுடம்பி
னற்கந்தமே பூசி நானென்றே—நிற்கின்றேன்
மெய்யோ வறிகிலேன் மேலா மணிமலையாய்
பொய்யோ வறியேன் புகல். (௩௦)

ஆணவமுங் காமியமு மல்லாத மாயையுமே
காணவே நீங்கிவிடுங் கண்ணோக்காய்—சேணோங்கு
தேசுடைய ரத்னகிரித் தேவனே யெப்பொழுது
மாசடையா நெஞ்சின் மகிழ்ந்து. (௩௧)

கோபமுங் காமமுங் கொள்ளு மனப்பேயே
யாபத்துக் குற்றதுணை யாகுமே—பாபமெல்லா

நீக்குமே ரத்னகிரி நின்மலனைச் சிந்தித்தாற்
றூக்குமே பேரின்பந் தான். (௩௨)

மாச்சரியங் கொண்ட மனத்தா லுழல்வேனைப்
பேச்சரிய முத்தியினைப் பேணவைப்பாய்—பூச்சொரிந்து
வந்தனைசெய் மெய்யடியார் வாழத்துகின்ற ரத்னகிரி
யெந்தையே யானுய்ய வின்று. (௩௩.)

குரோதமும் லோபமுங் கொள்ளுநெஞ்சே யுன்னால்
விரோதமே வந்ததிவை மேவேற்—சிரோமணியாய்ப்
பாடுவோர் நெஞ்சிற் பதிந்திருக்கும் ரத்னகிரி
வீடருளும் பெம்மானை வேண்டு. (௩௪)

பொல்லா மனமே புகழ்படைத்த ரத்னகிரி
நல்லானை யெப்போது நம்புவாய்—பொல்லாத
தன்மையினுற் றீயோரைச் சாராதே யெந்நாளு
நன்மையா மின்ப நயந்து. (௩௫)

வஞ்சனையும் பொய்யும் வளர்க்குநெஞ்சை வெல்லுதற்குத்
தஞ்சமென்று நின்பதத்தைச் சார்ந்தேனை—யஞ்சலென்று
காவா தொழியிற் கருணையிலன் ரத்னகிரித்
தேவனென்று சொல்லுவேன் றேர். (௩௬)

கரணமுந் தேகமுங் காண்கின்ற நோயு
மரணமு நீங்கியுனை மன்னச்—சரணங்
கொடுத்தாளும் ரத்னகிரிக் கொற்றவனே யென்னைத்
தடுத்தாள்வ துன்கடனே தான். (௩௭)

அஞ்ஞான மேலிட் டழுந்திக் கிடப்பேனை
மெய்ஞ்ஞான வீடதனில் மேவவைப்பா—யெஞ்ஞான்றுஞ்
சோதிமய மாகவே தோன்றிநிற்கும் ரத்னகிரி
யாதியே நின்கருணை யால். (௩௮)

அரிதான ரத்னகிரி யண்ணலே ஞானம்
பிரியா திருக்குவண்ணம் பேசாய்—பரிவோடு
சன்மார்க்க முள்ள சனகாதி நால்வருக்கு
நன்மார்க்கஞ் சொன்னுய் நயந்து. (௩௯)

அவாவொழிய ரத்னகிரி யையனே யுன்னு
லவாவறிவு பெற்றுய்வ னேயான்—றவாவினையிற்
சூழ்ந்து கிடப்பனோ சொல்லுவாய் நின்பதத்தில்
வாழ்ந்து கிடப்பனோ வந்து. (௪0)

பாசபந்த நீங்கியுனைப் பன்னாளும் பூசிக்க
வாசைகொடுத் தென்னையுமே யாளுவாய்—நேசமுட
னம்புமடி யாருக்கு நன்மைதரும் ரத்னகிரி
யும்பனே யின்பமெலா முண்டு. (௪௧)

அன்போடு ரத்னகிரி யண்ணலடிக் கெந்நாளும்
பொன்போலு மின்னுகின்ற பூச்சொரிந்தே—துன்பகல
வெண்ணியே போற்று திருக்கின்ற மானிடர்கள்
கண்ணிவாய்ப் பட்டபுள்ளே காண். (௪௨)

கொல்லா விரதமே குற்றமற்ற தென்றுணர்ந்த
நல்லோர் புகன்றிடவு ஞாலமதிற்—பல்லோர்கள்
கொல்லுந் தொழில்பூண்டு கும்பியிலே வீழ்வதென்னே
செல்வ மணிமலையாய் செப்பு. (௪௩)

ஓருயிருங் கொல்லா துயிர்க்கிரங்கி நிற்பதுவே
தாரணியி னல்ல தருமமாம்—பூரணமாய்
நிற்கின்ற ரத்னகிரி நித்தியனே யந்நெறியைக்
கற்பியாய் நீயே கனிந்து. (௪௪)

எவ்வுயிரு நின்னுருவ மென்றெண்ணி யெப்பொழுது
மவ்வுயிரைக் கொல்லா தருணாடி—யிவ்வுலகி
னின்பதத்தைப் பேணுகின்ற நேயருழி ரத்னகிரி
நன்பதனே யென்னையுநீ நாட்டு. (௪௫)

ஊனை விரும்பி யுழலுகின்ற நெஞ்சமே
தேனு மமுதமுமாய்த் தித்தித்து—வானவர்கள்
போற்றவரும் ரத்னகிரிப் புண்ணியனைச் சிந்தித்தாற்
கூற்றுவனை வெல்வாய் குறித்து. (௪௬)

பஞ்சாக் கரத்தைப் பரவலுறு நாவாலே
யஞ்சாதே யூனை யருந்தினை—நெஞ்சமே
யெண்ணிறந்த கால மிடருழப்பாய் ரத்னகிரி
விண்ணவர்கு முண்ணலையே வேண்டு. (௪௭)

பாபத்துக் கஞ்சாது பல்லுயிரைக் கொல்வதனு
லாபத்தாய் வந்துவிடு மந்நரக—நீபத்
தொடையானை யீன்றெடுத்த சுந்தரனை ரத்னகிரி
விடையானை நெஞ்சமே வேண்டு. (௪௮)

தன்னுயிரைப் போலச் சகமதனி லெந்நாளு
மன்னுயிரைக் காத்தன் மதியென்று—முன்னோர்கள்

சொல்லி யிருப்பதாற் றுன்பகற்றி ரத்னகிரி
நல்லருள்சேர் பெம்மானை நாடு. (சகூ)

முத்திதனைப் பெற்ற முனிவரொடு கூடுதற்குப்
பத்திபுரி நெஞ்சமே பல்லுயிரைக்—கொத்தி
யருந்தாது ரத்னகிரி யண்ணலையே தேடி
வருந்தி நினைப்பதே மாண்பு. (ருo)

பொய்யா முலகதனிற் பொய்வார்த்தை யேபேசி
யுய்யா நரகதனி லூறுதீர்—பொய்யில்லா
மெய்யான ரத்னகிரி வேதியனைத் தோத்திரித்தே
யுய்யுங்கள் சொன்னே னுவந்து. (ருக)

நல்லோர்க்கும் வஞ்சகமாய் ஞாலமதிற் பொய்பேசி
பொல்லா நரகத்திற் போகுநெஞ்சே—யெல்லோர்க்கு
மின்பஞ்செய் ரத்னகிரி யெம்பெருமான் சீர்பேசி
துன்பமெலா நீக்கத் துணி. (ருஉ)

ஆசான் திரவியமு மாலயத்தின் பொக்கிடமும்
பேசாது கொள்ளைகொள்ளும் பேய்நெஞ்சே—மாசார்ந்த
வெய்ய நரகதனில் வீழுவாய் ரத்னகிரி
மெய்ய னருட்பொருளை மேவு. (ருங)

அன்னமிட்டோர் வீட்டி னரும்பொருளைக் கொள்ளையிடக்
கன்னமிடும் புன்னெஞ்சே காசினியி—லுன்னுவாய்
பன்னரிய ரத்னகிரிப் பாங்குடைய மெய்ப்பொருளை
நன்னயமாய்த் தேடு நயந்து. (ருச)

கள்ளருந்தி மெய்மறந்து காலனுக்குட் சிக்கியே
துள்ளிப் பதைக்கின்ற துன்மனமே—கள்ளதனை
யுண்ணுது ரத்னகிரி யோதரிய வெம்பெருமான்
றண்ணூர்ந்த சீருந்தித் தங்கு. (ருரு)

கஞ்சாவை யுண்டு கனமயக்கம் பூணுதே
யஞ்சாத ரத்னகிரி யெம்மானைத்—துஞ்சாம
லுன்னியே நீங்காத வுண்மாசு தீர்வதே
பொன்னனைய ஞானப் பொருள். (ருசு)

மாதர் மொழிகேட்க மால்கொள்ளு மென்செவியே
வேதனையை யுண்டாக்கு மேவாதே—நீதிதனை
யோதுமறை போற்றுகின்ற வொப்பிலா ரத்னகிரி
நாதன் புகழ்கேட்க நாடு. (ருஎ)

காயமே மாதர் கலவியிலே செல்லாதே
மாயமுறுஞ் சென்மத்தை மாற்றுது—நேயமுடன்
பல்லோரும் போற்றிசெய்யும் பான்மையுள ரத்னகிரி
வல்லோனைச் சேர மதி. (௫௮)

கண்ணுன் முகத்தாற் கரியமயிர்ப் பின்னலா
லண்ணுந் திருக்கு மணிமுலையாற்—பண்ணுர்ந்த
பேச்சினுன் மாயைசெய்யும் பெண்ணைவிட்டு ரத்னகிரி
யீச்சுரனைக் கண்கா ணினி. (௫௯)

அன்ன நடையென்று மழகுநிறம் பொன்னென்று
மின்னலிடை யென்றுமே மெல்லியளைப்—பன்னுளும்
பன்னிப் புகழாதே பாழ்நாவே ரத்னகிரி
யுன்னரிய நம்பரனை யோது. (௬0)

நாறுகின்ற தேகமெல்லா நல்வாசமே பூசி
கூறவொணுக் காமக் குழிகாட்டு—மாறுபட்ட
கன்னியரை மூக்கே கருதி முகராதே
முன்னுமணி வெற்பனையே மோர். (௬௧)

நெஞ்சமே யெந்நாளு நேரிழையார் மையலிலே
கொஞ்சமே னுஞ்செல்லல் குற்றமாந்—தஞ்சமென்று
மாதை யொருபாகம் வைத்தருளும் ரத்னகிரி
வேதியனை யுன்னியே மேவு. (௬௨)

பெண்ணுசை கொண்டு பிதற்றுநெஞ்சே யெந்நாளு
முண்ணுேக்கிப் பார்த்தே யுழலாதே—பெண்ணுருவாய்த்
தோனரம்பு மாமிசமே தோன்றுதலால் ரத்னகிரி
யூனமிலா நம்பரனை யுன்னு. (௬௩)

மாருதே நாறு மலசலமே பெண்போலக்
கூரு மவயவத்தைக் கொண்டிருக்கும்—வேருகப்
பெண்ணுருவ மில்லையிதைப் பேணியே ரத்னகிரிக்
கண்ணுதலை நெஞ்சே கருது. (௬௪)

தேன்போலும் வார்த்தைகளைத் தித்திக்க வேபேசி
மான்பார்வை யொத்த மதர்விழியாற்—ருன்பார்த்து
மாரு தெனைமயக்கு மாதகற்றி ரத்னகிரிப்
பேருன பெம்மானைப் பேணு. (௬௫)

நேருடைய காரியத்தை நீங்காமல் வாதுசெய்து
சாருகின்ற பெண்மயலைத் தள்ளிவிட்டு—நீருடனே

பூக்கொண்டு ரத்னகிரிப் புண்ணியனை யர்ச்சித்தாற்
காக்குமே பாபங் களைந்து. (சுசு)

மாயைப் பிசாசே மடிபிடித்துப் போராடக்
காயத்துட் பெண்போலக் காட்டுமே—நேயமுட
னம்பி மயங்காதே நன்னெஞ்சே ரத்னகிரித்
தம்பிரான் பொற்பதமே சாரு. (சுஎ)

மக்க ளுறவு மயானமட்டே ரத்னகிரி
நக்க னுறவு நமதுடனே—யொக்கநின்று
பந்தத் தனையகற்றிப் பாதத்திற் சேர்த்தருளுஞ்
சிந்தனைசெய் நெஞ்சே தெளிந்து. (சுஅ)

நன்மகவை யீன்று னலமுண்டு நன்மையிலாத்
துன்மகவை யீன்றுற் றுயரமா—நன்மகவு
மாளுங்கா னெஞ்சமே மாதுன்பம் ரத்னகிரி
யாளும் பரன்கழல்வை யன்பு. (சுகூ)

முத்தியினைத் தந்தாளு முன்னவனும் ரத்னகிரிக்
கத்தனையே போற்றாது காதலித்தே—யித்தரையின்
மக்கடனைப் போற்றி வாழ்வதனு லேதுபயன்
றக்கநெஞ்சே யீதுணர்ந்து சார். (எ0)

நித்தியமாம் ரத்னகிரி நின்மலனைப் பேணிநெஞ்சே
சத்தியமா முத்தியினைச் சாருவாய்—புத்தியினு
லாதரிக்கும் பிள்ளை யனித்தியமே யாகியிடும்
பூதலத்தி லிற்காது பொய். (எக)

காசுறவு கொண்டு கடல்சூழ்ந்த பூமியெல்லாம்
வேசறவுண் டாயிடநீ மேவாதே—நேசமுற
மோனமொடு ரத்னகிரி முன்னவனைப் பேணிநெஞ்சே
ஞானமதைத் தேடுவதே நன்கு. (எஉ)

திங்கிருக்கும் பெட்டியாஞ் சென்ம வினைப்பையாம்
பங்கருளை நீக்குகின்ற பாவமா—மீங்குநின்று
பற்றும் பணமெல்லாம் பற்றற்ற ரத்னகிரி
யுற்றவிறைக் கீவா யுவந்து. (எஙு)

பொன்றும லேபொருளைப் போற்றிவா ழென்றுசொன்ன
நன்றுன வாக்கியத்தை நன்கறிவா—யொன்றுநெஞ்சே
சத்தியமாம் ரத்னகிரித் தற்பரனு மெய்ப்பொருளைப்
பத்தியினுற் போற்றுவதே பண்பு. (எச)

ஈசனடி யாருக்கே யீயாத பொன்முழுதுந்
தேசுபெற மாட்டாது தேறுவாய்—நாசமதாய்க்
காணா தொளித்துவிடுங் கண்முன்னே யீங்குநெஞ்சே
சேணோங்கு ரத்னகிரி சேர். (௭௫)

பொன்னையே தேடிப் புதைக்குநெஞ்சே யிவ்வுலகி
லென்னபய னாருமிதை யெண்ணுவாய்—பொன்னையெலா
நல்லோர் தமக்களித்து ரத்னகிரி நாதனடி
செல்லுவாய் சொன்னேன் றெளிந்து. (௭௬)

உற்றாரைப் பேணாது முண்மைமொழி பேசாதுங்
கற்றாரைப் போற்றாதுங் காதலித்தே—பற்றிப்
பிடிக்குந் திரவியத்தைப் பேணாது முத்தி
கொடுக்குமணி வெற்பனையே கூறு. (௭௭)

பொய்யை வளர்க்கும் பொருளதனைத் தேடாது
மெய்யை வளர்ப்பதற்கு மேதினியி—லையமின்றிக்
காட்சிதரும் ரத்னகிரிக் கண்ணுதலைத் தேடுநெஞ்சே
மாட்சி பெறுவாய் மகிழ்ந்து. (௭௮)

பொன்மருது வேம்பிலுப்பை புன்குபுளி யாலரசு
நன்மதியைத் தாவிநிற்கும் ரத்னகிரி—மென்முடியிற்
காப்பதற்கே யெந்நாளுங் கண்ணோக்கு மன்னவனைப்
பூப்பறித்தே யர்ச்சித்துப் போற்று. (௭௯)

மந்தாரை கோங்கு மலர்செருந்தி கொன்றையுடன்
வந்தார்கள் சூழுகின்ற மாவுமே—நந்தாம
லோங்கி வளர்கின்ற வொப்பற்ற ரத்னகிரிப்
பாங்கனையே போற்றாய் பரிந்து. (௮௦)

தென்னைபலா வாழை செழுங்கமுகு மாதளையுங்
கன்னலொடு சென்னலுமே கார்தாவ—மன்னிநிற்குஞ்
சென்னிதனை யாருஞ் சீர்மருவு ரத்னகிரி
மன்னவனே யென்னுளத்தே மன்னு. (௮௧)

இஞ்சி யெலுமிச்சை யீர்ங்குளஞ்சி நாரத்தை
மஞ்சணெல்லி வாழு மணிமலையி—லஞ்சலென்றே
யாளுங் குருபரனா யாதரிக்குஞ் சிற்பரனை
நாளுங் கதிபெறவே நம்பு. (௮௨)

கிள்ளைகுயி னாகணவாய் கீதமிடு வண்டுகளு
கள்ளிவருஞ் சோலையொடு நன்காக—விள்ளரிய

பூங்கா வனமும் பொலிகின்ற ரத்னகிரி
யோங்கார நாதனையே யுன்னு. (அங)

பொங்கருவி தங்குகின்ற புண்ணியமா மென்சுனையிற்
சங்குகளுஞ் சிப்பிகளுந் தான்வாழ்ந்தே—துங்கமணி
நித்திலத்தை யீன்றெடுத்தே நீங்கிடா ரத்னகிரிக்
கத்தனையே போற்றாய் கனிந்து. (அச)

நீலமலர் செங்கழுநீர் நீங்காத தாமரையுஞ்
சால விளங்குந் தடஞ்சுனையிற்—காலமெலா
மன்னங்கள் வாழு மழகுள்ள ரத்னகிரிச்
சென்னியனை நெஞ்சமே சேர். (அரு)

ஆனொடு மேதி யளவிலாப் பன்றிமுசன்
மானொடு வாழு மணிமலையிற்—றேனொடு
கொன்றை மலர்சூடிக் கொற்றவனாய் வீற்றிருந்து
நன்றருள்செய் நம்பனையே நம்பு. (அசு)

சிங்கங் கரடியொடு சீர்பெற்ற யானைபுலி
யங்கிவிழி யாளிகளு மன்புடனே—தங்கிநின்றே
யேற்றமுறு ரத்னகிரி யீசனே நின்பதத்தைப்
போற்றுநா ளெந்நாள் புகல். (அஎ)

வேங்கைநரி செந்நாய் விளங்குமொரு ரத்னகிரி
பாங்கா யிருந்த பரமனே—தீங்கொன்றும்
வாராதே யெந்நாளு மன்னவனே நின்பதத்தைப்
பேரா திருக்குநெறி பேசு. (அஅ)

செந்நாகம் பூநாகஞ் செல்லுங் கருநாக
நன்னாகம் வாழுரத்ன நன்மலையின்—மன்னாக
வேயிருக்குந் தேவனே வேலைக ளிவ்வுலகி
னாயினே னெஞ்சமே நண்ணு. (அகூ)

மன்னுமலைக் குள்ளிதுவே மாணிக்க மாமலையென்
றுன்னி யிருந்த வொருவனே—யின்னருளாற்
பேயேன் பிறவிநோய் பேர்த்திடுவாய் பெம்மானே
நாயேன் றுதிக்கறியே னன்கு. (கூ0)

புத்தன் றலையிடறப் பொன்னேடு நீர்செலுத்த
செத்தவெலும் பைப்பெண்ணாச் செய்யவே—ரத்னகிரி
நாதா வுனைத்துதித்த நன்ஞான சம்பந்தன்
பாதாம் புயமே பலம். (கூக)

ஆண்பனையும் பெண்பனையா வம்மறைசைத் தாள்பூட்டக்
காண்பரிய பொற்காசுங் கைப்பற்றச் — சேண்பரவு
மாணிக்க வெற்பாநின் மாபதத்தைச் சம்பந்தர்
பேணிநின்று பெற்றதுவே பேறு. (௩௨)

நாவிற் கரையனார் நன்மைபெற வெண்ணிநின்மேற்
பாவிற் சிறப்புடைய பண்பாடி — மேவிநின்ற
சூலைநோய் நீங்கினார் துன்பொழிய ரத்னகிரி
யாலயனே யென்வினையை யாற்று. (௩௩)

நீற்றறையைத் தண்ணீர்போ ணீர்ந்திவரக் கொல்லவந்த
சீற்றமுள்ள வானையுமே தெண்டனிடப் — போற்றிநின்ற
நாவரையர் பெற்றபதம் ரத்னகிரிப் பெம்மானே
யாவலுட னாயேற் கருள். (௩௪)

நஞ்சுண்டு நஞ்சொழித்த நாவரைய னல்வழியை
நெஞ்சுகந்து நின்பதத்தை நேசித்தேன் — கஞ்சமலர்த்
தாள்சூட்டி ரத்னகிரித் தாணுவே யிப்பொழுதே
வாள்போன்ற யென்வினையை மாற்று. (௩௫)

கற்றூணி கொண்டு கடல்கடந்தும் வீழியினிற்
பொற்காசு பெற்றும் புனன்மறைசை — நற்கதவின்
பூட்டுடைத்து நின்பதத்தைப் போற்றிநின்ற நாவலன்போல்
வேட்டிலேன் ரத்னவெற்பாய் மேவு. (௩௬)

திருநாவ லூரன் திருப்பாட்டைக் கேட்டே
பெருமகிழ்ச்சி கொள்ளும் பெருமான் — திருச்செவியி
லேறும் படிநெஞ்சே யீறிலா ரத்னகிரிப்
பேறுடையா யென்றுபல்காற் பேசு. (௩௭)

வெங்கராப் பிள்ளையினை மேதினியிற் கக்குதற்குஞ்
செங்கல்லும் பொன்னாய்த் திகழுதற்கும் — பொங்கொளிசேர்
பாவுடைய சுந்தரற்குப் பண்டருள்செய் ரத்னகிரித்
தேவனே யுன்றாளிற் சேர். (௩௮)

குருந்தடியின் கீழே குருமூர்த்தி யாகி
யருந்தவர்கள் சூழ வமர்ந்தே — பொருந்திவரு
வாதவூரர்க் கருளு மாசிலா ரத்னகிரிப்
போதகனை நெஞ்சமே போற்று. (௩௯)

உள்ளபொரு ளாவி யுடன்மூன்றுந் தந்துமனக்
கள்ளமெலா நீங்கியிரு கண்களினால்—வெள்ளநிறை
மாணிக்க வாசகர்க்கு மாணிக்க மாமலையாய்
காணிக்கை தந்தபதங் காட்டு. (கOO)

உம்பரெல்லாம் வாழ்க வுலகிலுள்ளோர் தான்வாழ்க
நம்புங் குருவாழ்க நாடோறு—மெம்பரனைப்
பாடுவோர் தாம்வாழ்க பார்க்கரிய ரத்னகிரிக்
கூடுவோர் வாழ்கமகிழ் கொண்டு. (கOக)

இரத்னகிரிமாலை முற்றிற்று.

தோத்திரப்பாமாலை முற்றிற்று முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
எ	௬	அ	யுலகினிற்பசழ்	யுலகினிற்புசழ்.
கூ	,,	௪	நபுருவன்	நபூருவன்.
உஅ	உ	உ	யென்னுடையுள்ளத்	யென்னுடையவுள்ளத்.
,,	,,	௪	வாழன்னபூரணி	வாழன்னபூரணி.
,,	௫	க	நானமறையின்	நான்மறையின்.

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 45544